




# தின பூமி

thinaboomi.com

நெல்லை, திங்கள், டிசம்பர் 16, 2024 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 08 ₹ 3.00









**ஜமைக்காவின் தேவைகளுக்காக நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்தது இந்தியா**


...2-ம் பக்கம்

**சாதிவாரிய கணக்கெடுப்பு % சதவீதம் நிறைவடைந்தது: தெலங்கானா முதல்வர் தகவல்**

...3-ம் பக்கம்

**மகளிர் ஐ.பி.எல்.: ரூ.1.60 கோடிக்கு மும்பை அணி ஏலம்போனார் தமிழக வீராங்கனை கமலினி**

...7-ம் பக்கம்





மறைந்த காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனின் உடல் நேற்று அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. முன்னதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று 2-வது முறையாக நேரில் சென்று இறுதி அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

### நாகப்பட்டினம், திருவாரூர் உள்ளிட்ட

# 4 மாவட்டங்களுக்கு நாளை ஆரஞ்சு அலர்ட்

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, டிச. 16-

**தமிழகத்தில் நாளை நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்ச் அலர்ட் விடுத்துள்ளது சென்னை வானிலை ஆய்வு மையம்.**

**கீழடுக்கு சுழற்சி...**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது மேலும் வலுப்பெற்று, மேற்கு-வடமேற்கு திசையில், தமிழக கடலோரப்பகுதிகளை நோக்கி அதற்கடுத்த இரு தினங்களில் நகரக்கூடும்.

**மிக கனமழைக்கு...**

நாளை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், காரைக்கால் பகுதிகளில் கன முதல் மிக கனமழையும், தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுவையில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

**12 மாவட்டங்களில்...**

18-ம் தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுவையில் கன முதல் மிக கனமழையும், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, ராணிபேட்டை, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், காரைக்கால் பகுதிகளில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

**4 மாவட்டங்களில்...**

19-ந் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிபேட்டை, வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. 20,21-ந் தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

**மேகமூட்டத்துடன்...**

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மறைந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உடல் அரசு மரியாதையுடன் தகனம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இறுதி அஞ்சலி

சென்னை, டிச. 16-

**மறைந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. முன்னதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று 2-வது முறையாக நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.**

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக 2 முறை இருந்தவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன். ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், நுரையீரலில் ஏற்பட்ட தொற்று காரணமாக சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் கடந்த மாதம் அனுமதிக்கப்பட்டார். மூச்சுத் திணறலால் அவதிப்பட்டு வந்த அவருக்கு ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு அவரது உடல்நிலை மோசமடைந்தது. இதையடுத்து செயற்கை சுவாசக்கருவி மற்றும் உயிர்காக்கும் கருவிகள் உதவியுடன் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்தநிலையில் சிகிச்சை பலனின்றி ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் நேற்று முன்தினம் காலை மரணம் அடைந்தார். அவருக்கு வயது 75.

இதையடுத்து மணப்பாக்கம் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் மனைவி வரலட்சுமிக்கு ஆறுதல் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், செங்கோட்டையன், வைகோ, கி.வீரமணி, சைதை துரைசாமி, கே.பாலகிருஷ்ணன், பாஜக தலைவர் அண்ணாமலை, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்பட பலர் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தினர்.

ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவுக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர். நேற்றும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இறுதி அஞ்சலி செலுத்தினார். காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி, பொதுமக்கள் என பலர் இளங்கோவன் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். இதையடுத்து ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் இறுதி ஊர்வலம் தொடங்கியது. இறுதி ஊர்வலத்தில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் காங்கிரஸ் கட்சி எம்.பிக்கள், எம்.எல்.ஏ.க்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

மணப்பாக்கம் இல்லத்தில் இருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்ட , ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல் முகலிவாக்கம் மின் மயானத்தில் வைக்கப்பட்டு 3 முறை வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு 48 குண்டுகள் முழங்க அரசு மரியாதை செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து இரங்கல் கூட்டம் நடத்தப்பட்ட பின் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல் தகனம் செய்யப்பட்டது.

# விரைவில் 234 தொகுதிகளில் சுற்றுப்பயணம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, டிச. 16-

**2026 சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளேன் என எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

சென்னை வானகரத்தில் அ.தி.மு.க. பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்துகொண்டு பேசியதாவது:- பாராளுமன்ற தேர்தல் முடிந்த பிறகு அ.தி.மு.க. மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்தது. கூட்டணி சரியாக அமையவில்லை என கூறினார்கள். கூட்டணி வரும், போகும். ஆனால் கொள்கை நிலையானது. தமிழகத்தில் தனித்து நின்று ஆட்சியை அமைத்த ஒரே கட்சி அ.தி.மு.க.தான். அ.தி.மு.க.வின் எழுச்சி, 2026 சட்டமன்ற தேர்தலில் வெற்றி. 2026 தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில் அமைக்கப்படும் கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியில் அமரும். 234 தொகுதிகளிலும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளேன்.

இவ்வாறு பேசினார்.

# அ.தி.மு.க. பொதுக்குழுவில் 16 தீர்மானங்கள் நிறைவேற்றம்

சென்னை, டிச. 16-

**அ.தி.மு.க. பொதுக்குழுவில் மதுரை மேலூர் அருகே டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதை மத்திய அரசு கைவிட வலியுறுத்தி உள்ளிட்ட 16 நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.**

அ.தி.மு.க. பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் சென்னை வானகரம் ஸ்ரீ வாரு வெங்கடாஜலபதி பேலஸ் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்துக்கு கட்சியின் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

பொதுக்குழு கூட்டத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மேலும் தொழிலதிபர் ரத்தன் டாடா, சி.பி.எம். பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, கர்நாடக முன்னாள் முதல் மந்திரி எஸ்.எம்.கிருஷ்ணா மற்றும் டெல்லி கணேஷ் ஆகியோரின் மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அ.தி.மு.க.வின் பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தில் 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் ஏற்கெனவே செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட 9 தீர்மானங்களுடன் சேர்த்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதன்படி அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட 16 தீர்மானங்கள் வருமாறு., மதுரை மேலூர் அருகே டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதை மத்திய அரசு கைவிட வலியுறுத்தி அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. போதிய அழுத்தம் கொடுத்த டங்ஸ்டன் சுரங்கத்தை தடுக்கத் தவறியதாக தமிழ்நாடு அரசுக்கும் கண்டனம் தெரிவித்து, நீட் தேர்வு ரத்து விவகாரத்தில் கபட நாடகம் ஆடும் மாநில அரசுக்கு கண்டனம் தெரிவித்தும். கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வரும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர மத்திய அரசை வலியுறுத்தியும், பெஞ்சல் புயல் பாதிப்பின் போது, மக்களின் அடிப்படைத் தேவைகளை தமிழ்நாடு அரசு நிறைவேற்றவில்லை எனவும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் வகையில் விலைவாசி உயர்வு உள்ளதாகவும் அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டம் ஒழுங்கு சீர்கேடு, அதிக வரி விதிப்பு உள்ளிட்டவற்றை கண்டித்தும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத தி.மு.க. அரசை கண்டித்தும், திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்தியும், சென்னை ஐகோர்ட்டில் வழக்காடு மொழியாக தமிழ் இடம் பெற வலியுறுத்தி நிறைவேற்றப்பட்டது.

மத்திய அரசு இயற்றும் சட்டங்களுக்கு இந்தியில் பெயர் வைப்பதை தவிர்த்து ஆங்கிலத்தில் பெயர் வைக்க வலியுறுத்தியும், பார்முலா 4 பந்தயம், பேனா நினைவு சின்னம் உள்ளிட்டவற்றிற்காக நிதியை வீணடிக்கும் தி.மு.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்தும், குடிமராமத்து திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த தவறிய தி.மு.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்தும், கோதாவரி - காவிரி, பரம்பிகுளம் - ஆழியாறு, பாண்டியாறு - புன்னம்புழா திட்டங்களை தொடர தவறிய தி.மு.க. அரசுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

வாக்காளர் பட்டியலில் நிலவும் குளறுபடிகளை சரி செய்து நியாயமாக தேர்தல் நடத்த இந்திய தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தியும், சாதிவாரி கணக்கெடுப்பை எடுக்க தி.மு.க. அரசை வலியுறுத்தப்பட்டது. இஸ்லாமிய சிறைக்கைதிகளை விடுதலை செய்ய எந்த முயற்சியும் மேற்கொள்ளாத தி.மு.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்து அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கல்வியை மீண்டும் மாநில பட்டியலில் சேர்க்க சட்ட திருத்தம் மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்தியும், தமிழ்நாட்டிற்கான நிதிப் பகிர்வை பாரபட்சமில்லாமல் வழங்கிட மத்திய அரசை வலியுறுத்தி அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசின் கருவூலத்திற்கு தமிழ்நாட்டிலிருந்து செல்லும் வருவாயில், நான்கில் ஒரு பங்குகூட நிதிப் பகிர்வாக கிடைப்பதில்லை. இதன் காரணமாக, வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை உருவாகிறது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

2026ல் எடப்பாடி பழனிசாமியை மீண்டும் முதலமைச்சராக்குவோம் என்றும் எம்.ஜி.ஆர். ஜானகி நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்திய எடப்பாடி பழனிசாமிக்கு நன்றி தெரிவித்தும் அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக இந்த கூட்டத்தில் பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# லோக் அதாலத் மூலம் ஒரே நாளில் 1.45 கோடி வழக்குகள் முடித்துவைப்பு

புதுடெல்லி, டிச. 16-

**நாடு முழுவதும் நடைபெற்ற லோக் அதாலத் மூலம் ஒரே நாளில் 1.45 கோடி வழக்குகள் முடித்து வைக்கப்பட்டன. இதில் ரூ.7 ஆயிரம் கோடி பணப்பட்டுவாடா நடைபெற்றது.**

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் நீதிமன்றங்களை நோக்கி வரும் வழக்குகளுக்கு உடனடியாக தீர்வு காண தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (என்ஏஎல்எஸ்ஏ) சார்பில் லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றம்) நடத்தப்படுகிறது. இதன்படி இந்த ஆண்டுக்கான 4-வது மற்றும் கடைசி மக்கள் நீதிமன்றம், ராஜஸ்தான் தவிர அனைத்து மாநிலங்களிலும் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் 1.45 கோடி வழக்குகள் முடித்து வைக்கப்பட்டதாகவும் இதன்மூலம் சுமார் ரூ.7,462 கோடி பணப் பட்டுவாடா நடைபெற்றதாகவும் என்ஏஎல்எஸ்ஏ சிறப்புப் பணி அதிகாரி ஷ்ரேயா அரோரா மேத்தா தெரிவித்தார். இதன்மூலம் 1.22 கோடி புதிய வழக்குகள் நீதிமன்றத்துக்குள் நுழைவது தடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் விசாரணை நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்த 23.7 லட்சம் வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எனினும், நீதிமன்றங்களில் இன்னும் 4.65 கோடி வழக்குகள் நிலுவையில் உள்ளன.

### பார்லி.யில் இன்று தாக்கல் செய்யப்படவிருந்த

# ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா ஒத்திவைப்பு?

புதுடெல்லி, டிச. 16-

**பாராளுமன்ற மக்களவையில் இன்று தாக்கலாக இருந்த ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா திடீரென ஒத்தி வைக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.**

பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த மோடி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது குறித்து ஆராய்ந்து மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கு வதற்காக முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் உயர்நிலைக் குழுவை அமைத்தது. மார்ச் மாதத்தில் குழுவின் அறிக்கை ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் அளிக்கப்பட்டது.

ஒரே நேரத்தில் தேர்தல் என்பதை, பல கட்டங்களாக செயல்படுத்தலாம். அதற்காக பல சட்ட திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை மத்திய மந்திரி சபை ஏற்றுக்கொண்டது. அதன் அடிப்படையில் மசோதா தயாரிக்கப்பட்டது. மசோதாவுக்கு கடந்த 12-ந்தேதி மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இதையடுத்து அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதா, 2024 மற்றும் யூனியன் பிரதேச சட்ட திருத்தமசோதா, 2024 ஆகிய இரண்டையும் சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பாராளுமன்றம் மக்களவையில் இன்று தாக்கல் செய்வார் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.

இதற்காக பட்டியலிடப்பட்டு இருந்தது. 3 சட்டப் பிரிவுகளில் திருத்தம், 12 புதிய சட்டப் பிரிவுகள் சேர்ப்பு மற்றும் யூனியன் பிரதேசங்களான புதுடெல்லி, ஜம்மு-காஷ்மீர், புதுச்சேரி ஆகியவற்றுக்கான சட்டங்களில் திருத்தம் என, மொத்தம் 18 சட்ட திருத்தங்கள் செய்ய வேண்டும்.

இந்த நிலையில் பாராளுமன்ற லோக்சபாவில் இன்று தாக்கல் செய்வதற்காக அறிவிக்கப்பட்டு இருந்த ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா ஒத்திவைக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பட்டியலிடப்பட்ட மானியங்களுக்கான துணை கோரிக்கைகளின் முதல் தொகுதியை அவையில் முதலில் நிறைவேற்றப்படுகிறது.

இதற்கு பின்னர் இந்த வார இறுதியில் ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான சட்ட மசோதாக்கள் கொண்டு வரப்படலாம் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. பாராளுமன்ற செயலகத்தால் வெளியிடப்பட்ட திருத்தப் பட்டியலில் நிகழ்ச்சி நிரலிலும் இந்த 2 மசோதாக்கள் இல்லை.


அதேநேரத்தில் சபா நாயகர் அனுமதியுடன் நிகழ்ச்சி நிரலை கடைசி நிமிடத்தில் மாற்றி அமைக்கவும் முடியும். பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் வருகிற 20-ந் தேதியுடன் முடிகிறது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| ↑ 843.16 | ↑ 219.60 |
| பாயிண்ட் 82,133.12 | பாயிண்ட் 24,768.30 |



**தங்கம்** 1 சவரன் ₹57,120 · 1 கிராம் ₹7,140



**வெள்ளி** 1 கிலோ ₹104,000 · 1 கிராம் ₹104.00

**டாலர்** ₹84.81

**பெட்ரோல்** ₹100.75 · **டீசல்** ₹92.34



### ஜமைக்காவின் சுகாதாரத் தேவைகளுக்காக

# நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்த இந்தியா

**புதுதில்லி, டிச. 16-**

ஜமைக்காவுக்கு இந்தியாவிலிருந்து நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

கரீபியன் கடல்பகுதியிலுள்ள தீவு நாடான ஜமைக்காவிற்கு இந்தியா சார்பில் சுமார் 60 டன் அளவிலான மருத்துவ மற்றும் பேரிடர் கால நிவாரண பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜமைக்காவின் மருத்துவத் தேவையை பூர்த்தி செய்யவும் பேரிடர் காலங்களில் உதவுவதற்காகவும் மனிதநேய அடிப்படையில் இந்தியா சார்பில் இந்த பொருள்கள் அனுப்பப்படுகின்றன. இதுகுறித்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கடந்த சனிக்கிழமை அவரது எக்ஸ் சமூக வலைத்தளத்தில் கூறியதாவது,

ஜமைக்கா நாட்டின் சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்யவும், அந்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், மேலும் சூறாவளி போன்ற பேரிடர் காலங்களில் உதவுவதற்காகவும்; அவசரக் கால மருத்துவ உபகரணங்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் இதர அத்தியாவசிய பொருள்கள் உள்ளிட்ட 60 டன் அளவிலான நிவாரணப் பொருள்கள் மனிதாபிமான அடிப்படையில் இந்தியா சார்பில் அந்நாட்டிற்கு அனுப்பபடுகின்றன என்றார். பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ஜமைக்கா நாட்டு பிரதமர் ஆண்டிரியூ ஹோல்னஸ் இந்தியாவிற்கு முதல்முறையாக கடந்த செப். 30 முதல் அக். 3 வரை வருகை தந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### தாய்லாந்து: திருவிழாவில் குண்டுவெடித்து 3 பேர் பலி

**பாங்காக், டிச. 16-**

தாய்லாந்த் திருவிழாவில் வெடிகுண்டு வெடித்ததில் 3 பேர் பலியாகினர்.

தாய்லாந்தின் தக் மாகாணம் உம்பாங் நகரில் வருடாந்திர திருவிழா நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அப்போது விழாவில் கலந்து கொண்ட இருதரப்பினர் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த சிலர் அந்த கூட்டத்தை நோக்கி வெடிகுண்டு வீசினர். அது பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியதால் அங்கிருந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இந்த குண்டுவெடிப்பில் 3 பேர் உடல் சிதறி பலியாகினர். 50-க்கும் மேற்பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது. மீட்பு படையினர் அவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அவர்களில் பலர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. இதனையடுத்து பலியானவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ரா தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் 2 பேரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

### ஐ.டி. ஊழியர் தற்கொலை:

# மனைவி - மாமியார் கைது

**கர்நாடகா, டிச. 16-**

பெங்களூரு ஐ.டி. ஊழியர் தற்கொலையில் மனைவி - மாமியார் உள்பட 3 பேர் அதிரடி கைது

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான அதுல் சுபாஷ் என்ற ஐடி ஊழியர் கடந்த திங்களன்று தனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். மரணத்துக்கு முன் செய்ய வேண்டியவை என்று அட்டவணை போட்டு அதை ஒவ்வொன்றாக முடித்துவிட்டு கடைசியில் அவர் தற்கொலை செய்துள்ளார்.

24 பக்க தற்கொலைக் குறிப்பை விட்டுவிட்டு, 90 நிமிட வீடியோவைப் பதிவு செய்துவைத்து அவர் தற்கொலை செய்துள்ளார். அந்த பதிவில், தன் மீதும் தனது குடும்பத்தினர் மீது தனது மனைவி நிகிதா சிங்கானியா மற்றும் அவரது குடும்பத்தினர் பல்வேறு பொய் வழக்குகளைப் போட்டுள்ளதாகக் குற்றம் சாட்டினார். விவாகரத்து பெற்ற மனைவி மற்றும் மகனுக்குப் பராமரிப்பு தொகையாக மாதம் ரூ.2 லட்சம் வழங்கவேண்டும் என்று தன்னை அவர்கள் வற்புறுத்துவதாகத் தெரிவித்தார்.

மேலும் உத்தர பிரதேச ஜான்பூர் நீதிமன்ற நீதிபதி, என் மீதான வழக்குகளைத் தீர்த்து வைக்க ரூ.5 லட்சம் லஞ்சம் கேட்பதாகவும் குற்றம் சாட்டியிருக்கிறார். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து பெங்களூரு போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். அதுல் மீதான வழக்குகளை வாபஸ் பெற ரூ. 3 கோடியும், அவரது மகனைப் பார்க்க வருவதற்கு ரூ. 30 லட்சமும் நிகிதா குடும்பத்தினர் கேட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதற்கிடையே சுபாஷின் தற்கொலையை தொடர்ந்து உத்தரப்பிரதேசத்தில் உள்ள மனைவி, மாமியார் மற்றும் உறவினர்கள் தலைமறைவாகினர். அவர்கள் மூன்று நாட்களுக்குள் போலீஸ் முன் ஆஜராக வேண்டும் என்று உத்தர பிரதேசத்தில் உள்ள அவர்களது வீட்டில் பெங்களூரு போலீஸ் நோட்டீஸ் ஒட்டியது.

இந்நிலையில் தலைமறைவாக இருந்த அதுல் சுபாஷின் மனைவி நிகிதா சிங்கானியா, அவரது தாயார் நிஷா மற்றும் சகோதரர் அனுராக் ஆகியோர் தற்கொலைக்குத் தூண்டிய வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹரியானாவின் குருகிராமில் இருந்த நிகிதாவையும், உத்தரப் பிரதேசத்தின் அலகாபாத்தில் இருந்த அவரது தாய் நிஷா மற்றும் சகோதரர் அனுராக் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைக்கு அவர்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக சட்டங்கள் அனைத்தும் பெண்களுக்கு சாதகமாகவே இருப்பதாக தனது பதிவில் குற்றம் சாட்டிய அதுல் சுபாஷ், நான் எவ்வளவு கடினமாக உழைத்து, என் வேலையில் சிறந்து விளங்குகிறேனோ, அவ்வளவு அதிகமாக நானும் என் குடும்பத்தினரும் துன்புறுத்தப்படுகிறோம், மிரட்டி பணம் பறிக்கப்படுகிறோம், மேலும் இதை ஒட்டுமொத்த சட்ட அமைப்பும் ஊக்குவிக்கிறது. இப்போது, நான் போனதால், பணமும் இருக்காது, என் வயதான பெற்றோரையும், என் சகோதரனையும் துன்புறுத்த எந்த காரணமும் இருக்காது என்று உருக்கமாகத் தெரிவித்தார். மேலும் மனைவி நிகிதாவும் அவரது தாயார் நிஷாவும் தன்னை தற்கொலைக்கு தூண்டியதாகவும் அவர் குற்றம் சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### விருப்பமான நாடுகள் பட்டியல்:

# இந்தியாவை நீக்கியது சுவிட்சர்லாந்து

**சுவிட்சர்லாந்து, டிச. 16-**

இந்தியாவை தங்களின் விருப்ப நாடுகள் பட்டியலில் இருந்து சுவிட்சர்லாந்து நீக்கியுள்ளது. இதனால் அங்கு வணிகம் மேற்கொண்டிருக்கும் நிறுவனங்கள் கூடுதல் வரி செலுத்தும் கட்டாயத்துக்கு ஆளாகியுள்ளன.

சுவிட்சர்லாந்து இந்தியவிலும், இந்திய நிறுவனங்களும் அந்நாட்டிலும் வர்த்தகம் செய்து வருகின்றன. சுவிட்சர்லாந்து சட்டப்படி மற்ற நாட்டு நிறுவனங்கள் 10 சதவீதம் வரியை செலுத்த வேண்டும்.

ஆனால் இந்தியா போன்று விருப்ப பட்டியலில் இருக்கும் நாடுகளை சேர்ந்த நிறுவனங்கள் 5சதவீதம் வரியை செலுத்தினால் போதுமானது. இதற்கு இரட்டை வரி விதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தம் என்று பெயர். இந்த விருப்ப பட்டியலிலிருந்துதான் தற்போது இந்தியாவை அந்நாடு நீக்கியிருக்கிறது.

சுவிட்சர்லாந்தின் மிகப் பெரிய வணிக நிறுவனமான நெஸ்லே பொருட்கள் இந்தியாவில் அதிக புழக்கத்தில் உள்ளன. அதில் குறிப்பாக மேகி நூடுல்ஸ் அதிக விற்பனை ஆகும் பண்டமாக இருந்தது.

ஆனால் உணவுப் பொருளான மேகி நூடுல்ஸ் -இல் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக அளவு ரசாயனம் கலந்து இருப்பதாக புகார்கள் எழுந்தன. இதுகுறித்து விசாரணை நடத்தப்பட்ட நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு மேகி இந்தியாவில் தடை செய்யப்பட்டது.

ஆனால் அதிக ரசாயனம் கலக்கவில்லை என கூறி நெஸ்லே நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு முடிவுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது.

வெகு காலமாக இந்த வழக்கு நடந்து வந்த நிலையில் கடந்த 2022 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் மத்திய அரசின் முடிவு சரிதான் என்ற தீர்ப்பளித்தது. இதனால் குமைச்சலில் இருந்த சுவிட்சர்லாந்து தற்போது இந்த வேலையை பார்த்துள்ளது.

சுவிட்சர்லாந்தின் இந்த உத்தரவு 2025 ஜனவரி 1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளது. அன்றைய தேதி முதல் அந்நாட்டில் வணிகம் செய்யும் இந்திய நிறுவனங்கள் கூடுதலாக 5 சதவீத வரி செலுத்தியாக வேண்டும்.

# தாஜ்மகாலை கட்டிய கலைஞரின் கை துண்டிப்பு

### உ.பி. முதல்வரின் பேச்சால் சர்ச்சை

**புதுடெல்லி, டிச. 16-**

அயோத்தி ராமர் கோவிலின் கைவினைஞர்கள் கவுரவிக்கப்பட்டதாகவும், தாஜ்மகாலைக் கட்டியவர்களின் கைகள் துண்டிக்கப்பட்டதாகவும் உ.பி. முதல்வர் சர்ச்சைக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மகாராஷ்டிராவின் தலைநகரான மும்பையில் உலக இந்துக்களின் பொருளாதார அமைப்பின் கருத்தரங்கு நடைபெற்றது.இதில் கலந்துகொண்டு உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் பேசியதாவது:- இன்று இந்தியாவில் பா.ஜ.க. ஆட்சியில் தொழிலாளர்களுக்கு மதிப்பளிக்கப்படுகிறது. அனைத்துவகையானப் பாதுகாப்பும் அவர்களுக்கு அரசால் அளிக்கப்படுகிறது. அயோத்தியில் ராமர் கோவில் திறப்பு விழா நிகழ்ச்சிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இதில் பிரதமர் நரேந்திரமோடி, ராமர் கோவிலை கட்டிய கைவினைஞர்கள் மீது மலர்களை தூவி கவுரவப்படுத்தினார். ஆனால், ஆக்ராவில் தாஜ்மகாலை கட்டியவர்களின் கைகள் துண்டிக்கப்பட்டன. அதேபோல், மிகவும் உயரியவகை துணிகளை நெய்தவர்களின் கைகளும் அக்கால ஆட்சியாளர்களால் துண்டிக்கப்பட்டன. இதன் காரணமாக இன்று அந்தவகை பாரம்பரியமிக்கக் கலாச்சாரத் துணிகள் முற்றிலும் அழிந்துவிட்டன. எனத் தெரிவித்தார்.

முதல்வர் யோகி கூறிய தாஜ்மகாலின் கைவினைஞர்கள் கைகளை யாரும் துண்டித்ததாக வரலாறு இல்லை என மறுப்பு கிளம்பியுள்ளது. இது குறித்து முகலாயர்கள் மீதான வரலாற்று ஆய்விற்கு உலகப் புகழ்பெற்ற அலிகர் முஸ்லிம் பல்கலைகழக வரலாற்றுதுறையின் ஓய்வுபெற்ற பேராசிரியர் அப்சல் கான் விளக்கமளித்துள்ளார்.

தாஜ்மகாலை கட்டிய கலைஞர்கள் அடுத்து மேலும் பல கட்டிடங்களை டெல்லி, ஆக்ரா பகுதிகளில் கட்டினார்கள். அவர்களது கைகள் வெட்டப்பட்டிருந்தது உண்மையானால் இது எப்படி சாத்தியம் என யோசிக்க வேண்டும். மாறாக, அந்த முக்கிய பல கைவினைஞர்களுக்கு தன் அரசவையில் பல பதவிகளை அளித்து மகிழ்ந்தார் மன்னர் ஷாஜஹான்..

### தொடர் மழையால் பயிர்கள் சேதம்:

# நிவாரணம் வழங்க அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை

**நெல்லை, டிச. 16-**

தொடர் மழை காரணமாக பயிர்கள் சேதம் அடைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மேலும் தங்களுக்கு நிவாரணம் வழங்க அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல்லை மாவட்டம் பாபநாசம் மேற்கு தொடர்ச்சி மலையில் கடந்த 2 நாட்களாக கனமழை பெய்தது. இந்த மழையானது 3-வது நாளாக நேற்று முன்தினம் வெளுத்து வாங்கியது. இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள பாபநாசம், சேர்வலாறு உள்ளிட்ட அணைகளுக்கு சுமார் 21 ஆயிரத்திற்கும் மேல் கன அடி நீர்வரத்து இருந்தது. இருந்த போதிலும் அணையில் போதியளவு நீர் இருப்பு இல்லாத காரணத்தினால் நீர் வெளியேற்றம் குறைவாக காணப்பட்டு வருகிறது.

மலைப்பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஆண்டுதோறும் ஆர்ப்பரித்து கொட்டும் பாபநாசம் அகஸ்தியர் அருவியில் நேற்று முன்தினம் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அந்த அருவியே தெரியாத அளவுக்கு தண்ணீர் தாமிரபரணி ஆற்றில் கரைபுரண்டு ஓடியது. பாபநாசம் அனவன்குடியிருப்பு பகுதியில் ஆண்டுதோறும் பொங்கல் திருவிழாவிற்காக சுமார் 80 முதல் 100 ஏக்கரில் விவசாயிகள் கரும்பு பயிரிடுவார்கள். இந்த ஆண்டு 80 ஏக்கரில் கரும்பு பயிரிட்டிருந்தனர். கரும்பு பயிரிட்டு 9 மாதங்களாகி பொங்கலுக்கு அறுவடைக்கு தயாராக இருந்தது.

இந்த நிலையில் கடந்த 3 நாட்களாக பெய்த கனமழையின் காரணமாக அனவன் குடியிருப்பு அருகே உள்ள சிங்கபெருமாள் குளம் உடைப்பு மற்றும் வடக்குக் கோடை மேலழகியான் கால்வாய் உடைப்பினால் மழை நீர் கரும்பு பயிரிட்ட விவசாய நிலத்தில் புகுந்தது. இதனால் சுமார் 20 ஏக்கரில் கரும்பு பயிர்கள் சாய்ந்து சேதமடைந்தன. அதேபோல, சேரன்மகாதேவி தாலுகாவிற்கு உட்பட்ட உதயமார்த்தாண்டபுரம், சக்திகுளம், கூலியூர், சேரன்மகாதேவி, பத்தமடை உள்ளிட்ட தாமிரபரணி ஆற்றை ஒட்டிய பகுதிகளில் வாழைகள் மற்றும் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளன. பயிர்கள் சேதமடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர். மேலும் தங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று அவர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பூமியை நோக்கி வரும் இரண்டு சிறு கோள்கள்: நாசா எச்சரிக்கை

**அமெரிக்கா, டிச. 16-**

பூமியை நோக்கி இரண்டு பெரிய ஆஸ்டிராய்டு எனப்படும் சிறு கோள்கள் வந்துகொண்டிருப்பதாக நாசா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா இரண்டு பெரிய சிறு கோள்கள் பூமியை நோக்கி அதிவேகமாக வந்துகொண்டிருப்பதாகவும் அவை நாளை அதிகாலை பூமியை கடந்து செல்லும் எனவும் தெரிவித்துள்ளது. இவை இரண்டினாலும் பூமிக்கு எந்தவொரு ஆபத்தும் இல்லை என்றும் அதனைத் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஆஸ்டிராய்டுகளில் மிகப்பெரியதிற்கு 'ஆஸ்டிராய்டு 2024 எஸ்.ஒய் 5 எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள நிலையில் அது 71 அடி சுற்றளவில் சிறிய ரக விமானத்தின் அளவில் இருக்கக்கூடும் எனவும் ஒரு மணி நேரத்திற்கு 17,389 கி.மீ வேகத்தில் பூமியை நோக்கி வந்துகொண்டிருப்பதாகவும் அது இந்திய மணிக்கணக்கில் நாளை காலை 5.56 மணியளவில், பூமியிலிருந்து சுமார் 3,500,000 கி.மீ. தொலைவில் அது கடந்து செல்லக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறுகோளுக்கும் பூமிக்குமான தொலைவானது நிலவுக்கும் பூமிக்குமான தொலைவை விட 9 மடங்கு அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**16-12-2024**




**மேஷம்:-** இன்று, வீண் வாக்குவாதங்களை தவிர்த்தால் வளம் பெருகும். எங்கே தேடுவேன்? எனப் பணத்தைத் தேடுவீர்கள். எங்கே நிம்மதி ? என பாடக்கூடிய நிலையும் உருவாகலாம்.

**ரிஷபம்:-** இன்று பௌர்ணமி நிலவு போல் உங்கள் முகம் பிரகாசமாக. ஒளிரும். புத்தி சாதுர்யம் ஓங்கும். வாக்கு வன்மை ஓங்கி வருமானம் பெருகும். வியாபாரிகள் மற்றவர்களை 2கவரும் வண்ணம் பேசி ஆதாயம் பெறுவர்.

**மிதுனம்:-** கடின உழைப்பின் காரணமாக காலத்திற்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். பிறர் மேல் வெறுப்பு, பொறாமை ஆகியவற்றை அகற்றி கொள்வது நல்லது. முன்கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும்.

**கடகம்:-** எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி கிட்டும். பல வழிகளிலும் அதிக தனலாபம் கிடைக்கும். வியாபாரம், தொழிலில் வரவு அதிகமாக, மன தெம்பும், மகிழ்ச்சியும் நிலவும்.

**சிம்மம்:-** அரசு ஆதரவு கிட்டும். முக்கியஸ்தர்களின் உதவியால் புதிய வேலைக்கான வாய்ப்புகள் தேடிவரும். சாத்திரங்களிலும், மந்திர, தந்திரங்களில் தேர்ச்சி ஆகிய நற்பலன்கள் உண்டாகும்.

**கன்னி:-** தனலாபம் எதிர்பார்த்தபடி அதிகரிக்கும். மனதில் தெய்வ நம்பிக்கை கூடும். சந்தோஷம், இனிய சுற்றுலாப் பயணங்கள் எல்லாம் ஏற்படும். ஆரோக்கியம் மேம்பாடு அடையும்,

**துலாம்:-** கோபத்தை தவிர்ப்பது நல்லது. அதன் காரணமாக குழப்பங்கள் குறையும். நியாயத்திற்கு மாறாக நடந்தால் நிம்மதி குறையும். உயர் அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் அனுகூலமான ஆதாயங்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:-** பலவகைகளிலும் பண வருமானம் பெருகும். விரைவில் திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர்.

**தனுசு:-** தொழில் விரிவாக்கத்தால் வருமான உயர்வுகளை எதிர்பார்க்கலாம். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும்.

**மகரம்:-** இன்று, சோகம் என்றால் என்ன என அறிந்து கொள்வீர்கள். பண இழப்புகளைத் தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். தேவையற்ற அவமானங்கள் ஏற்படும்.

**கும்பம்:-** வாகன சுகம் குறையும். அன்னையின் உடல் நலத்தில் அக்கறை கொள்ளுங்கள். ஒருவித பய உணர்வு, தூக்கம் இன்மையும் ஏற்படும். பொருள்களைக் காப்பது அவசியம்.

**மீனம்:-** உற்சாகம் மிகுந்த உன்னத நாளாக இருக்கும். குழந்தைகளின் வசதிகள், படிப்பு ஆகியவை பற்றி அதிக அக்கறை எடுத்து பாசத்தைப் பொழிவார்கள். தன்னம்பிக்கையால் வெற்றி கிட்டும்.

### கொடைக்கானலில் பனிமூட்டம்:

# வாகன ஓட்டிகள் கடும் அவதி

**கொடைக்கானல்,டிச. 16-**

கொடைக்கானலில் கடும் பனிமூட்டத்தால் வாகன ஓட்டிகள் அவதியடைந்துள்ளனர்.

வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் மழை பெய்து வரும் நிலையில் கொடைக்கானலில் கடந்த 3 தினங்களாக கன மழை பெய்து வருகிறது.இதன் காரணமாக மேல்மலை கிராமங்களில் பல இடங்களில் மண் சரிவு மற்றும் மரங்கள் முறிந்து விழுவது போன்ற நிகழ்வுகள் ஏற்பட்டு வருகிறது. மேலும் மின்சாரமும் அதிக நேரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அடுக்கம் மலைச்சாலையின் பல இடங்களில் மண் சரிவு மற்றும் பாறைகள் உருண்டு விழுந்தது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் நகரின் பல பகுதிகளில் ஒரு சில இடங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது. கொடைக்கானல் அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தை ஒட்டிய டோபிகானல் பகுதி வழியாக ஓடும் நீரோடையில் நட்சத்திர ஏரியிலிருந்து திறந்து விடப்படும் நீர் அதிகமாக வெளியேறுவதாலும் தொடர் மழையாலும் அதிகமான நீர் வெளியேறி குடியிருப்பு பகுதிக்குள் புகுந்தது.

இதனால் இப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ள வீட்டில் தங்கி இருப்பவர்கள் முகாம்களில் தங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாலை நேரத்தில் மழை அளவு குறைந்து கடும் பனிமூட்டம் நிலவியது.இதனால் நகரின் பல பகுதிகளில் அதிகமான பனிமூட்டத்தின் காரணமாக வாகன ஓட்டிகள் முகப்பு விளக்குகளை எரிய விட்டபடி சென்றனர். மேலும் நீண்ட நேரம் இப்பனிமூட்டம் நீடித்தது.நட்சத்திர ஏரிப் பகுதியில் சைக்கிள் சவாரி, படகு சவாரி செய்ய வந்த சுற்றுலாப் பயணிகள் அங்கு அதிகமாக காணப்பட்ட பனிமூட்டத்தை உற்சாகமாக கொண்டாடினர்.

நட்சத்திர ஏரியை ஒட்டிய நடைமேடையில் கேரள கல்லூரி மாணவிகள் பனிமூட்டத்தை ரசித்து உற்சாகமாக நடனம் ஆடி மகிழ்ந்தனர். மிக நீண்ட நேரம் நீடித்த பனிமூட்டத்தை ஏரிச்சாலையை சுற்றி வந்த சுற்றுலா பயணிகள் அனுபவித்து மகிழ்ந்தனர். அதன் பின்னர் நகர் பகுதியில் அவ்வப்போது பனிமூட்டத்துடன் கூடிய லேசான சாரல் மழை மட்டுமே பெய்தது.நேற்று காலை மேகமூட்டம் கூட இல்லாமல் வெயில் தலை தூக்கி உள்ளது. இதன் காரணமாக சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் சற்று நிம்மதி அடைந்துள்ளனர்.

### காலிஸ்தானியர்கள் குறித்து

# இந்திய உளவுத்துறைக்கு ரஷ்யா தகவல்

**அமெரிக்கா, டிச. 16-**

காலிஸ்தான் ஆதரவாளர்கள் குறித்த தகவல்களை ரஷியா இந்திய உளவு அமைப்பான ராவிற்கு வழங்கி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ராவுடனும், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உடனும் தொடர்பில் உள்ள ரஷிய அமைப்புகள் இந்த முக்கிய தகவல்களைப் பரிமாறுவதாக சீக்கியர்களுக்கான நீதி எஸ்.எப்.ஜே. அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. இந்தியாவால் தடை செய்யப்பட்ட இந்த அமைப்பின் இணை நிறுவனர் குருபத்வந்த் சிங் பன்னுன், காலிஸ்தானுக்கு எதிராகச் செயல்படுவதாக ரஷியாவை எச்சரித்துள்ளார்.

ரஷிய ஊடகம் காலிஸ்தான் குறித்த தப்பெண்ணத்தை பரப்புவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதற்கிடையே நியூ யார்க்கில் உள்ள ரஷிய தூதரகம் முன் எஸ்எப்ஜை உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அமரிக்கா, கனடா, இங்கிலாந்து ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள ரஷிய தூதரகம் முன்னும் ஆர்ப்பாட்டம் நடத்த எஸ்எப்ஜயினர் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. முன்னதாக குருபத்வந்த் சிங் பன்னுன் மீதான கொலை முயற்சியில் இந்தியாவை தொடர்புப்படுத்தி சர்ச்சை எழுந்ததும், அவர் இந்திய விமானங்களுக்கு அடிக்கடி வெடிகுண்டு மிரட்டல் விடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# வங்கதேசத்தில் இந்து கோவிலை சேதப்படுத்தியதாக 4 பேர் கைது

**டாக்கா, டிச. 16-**

வங்கதேசத்தில் இந்து கோவிலை சேதப்படுத்தியதாக 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வங்காளதேசத்தில் மாணவர்களின் போராட்டம் காரணமாக பிரதமர் ஷேக் ஹசீனா ராஜினாமா செய்து நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். அதன்பின்னர் வங்காளதேசத்தில் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு பொறுப்பேற்றது. அன்று முதல் இந்தியா-வங்காளதேச உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

வங்காளதேசத்தில் சிறுபான்மையினர் மீதான தாக்குதல் அதிகரித்து வருகிறது. குறிப்பாக இந்துக்கள் மீதான தாக்குதல், இந்து கோவில்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இது தொடர்பாக 2,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த தாக்குதல்களை கண்டித்து இந்தியாவில் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்நிலையில், சுனம்கஞ்ச் மாவட்டம் தோராபஜாரில் இந்து கோவில் மற்றும் இந்துக்களின் வீடுகளை தாக்கி சேதப்படுத்திய வழக்கில் ஆலிம் உசைன் (வயது 19), சுல்தான் அகமது ராஜு (வயது28), இம்ரான் உசைன் (வயது 31), ஷாஜகான் உசைன் (வயது 20) ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### ஜார்ஜியா அதிபராகும் முன்னாள் கால்பந்து வீரர்

**ரஷியா, டிச. 16-**

ஜார்ஜியாவின் புதிய அதிபராக முன்னாள் கால்பந்து வீரர் மைக்கேல் கவெலஷ்விலி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ரஷிய ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்ட ஆளும் ஜார்ஜிய கனவுக் கட்சி, கடந்த அக்டோபரில் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் மைக்கேல் கவெலஷ்விலி அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இருந்தபோதிலும் வரும் திங்கள்கிழமையுடன் பதவிக் காலம் முடியும் தற்போதைய மேற்கத்திய ஆதரவு அதிபர் சலோமி ஸூரபிச்விலி, மீண்டும் அதிபர் தேர்தல் முறை கொண்டுவரப்படும் வரை தான்தான் சட்டபூர்வ அதிபர் என்று தெரிவித்துள்ளார்.

# பிரதமரின் பேச்சு எங்களுக்கு சலிப்பை ஏற்படுத்தியுள்ளது

## பிரியங்கா காந்தி பேச்சால் பரபரப்பு

டெல்லி, டிச. 16-

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த நவம்பர் 26-ந் தேதி முதல் நடைபெற்று வருகிறது. வரும் டிசம்பர் 20-ந் தேதி வரை கூட்டத்தொடர் நடைபெற உள்ள நிலையில் மக்களவையில் அரசியலமைப்பு மீதான சிறப்புரைகள் இடம்பெற்றன.

அரசியலமைப்பை ஏற்று 75 வருடம் ஆகியுள்ளதைச் சிறப்பிக்கும் வகையில் இந்த உரைகள் இடம்பெற்றன. இதில் கடைசியாகப் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். நேரு தொடங்கி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி என வரிசையாக மோடி தனது உரையில் காங்கிரஸ் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கினார். ரத்த ருசி கண்ட காங்கிரஸ் அரசியலமைப்பை மீண்டும் மீண்டும் காயப்படுத்தியுள்ளது என்று அவர் தெரிந்தார்.

இந்நிலையில் கூட்டம் முடிந்து வெளியே வந்த வயநாடு காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி, மக்களவையில் மோடி ஆற்றிய 110 நிமிட உரையை பள்ளியின் இரண்டு கணித வகுப்புகளில் தொடர்ந்து இருப்பது போன்று சலிப்பூட்டுவதாக இருந்தது என தெரிந்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:- பிரதமர் புதியதாக ஒன்றும் பேசவில்லை, அவர் எங்களுக்கு சலிப்பை ஏற்படுத்தினார். இது என்னை பல ஆண்டுகளுக்கு பின்னோக்கி எடுத்துச் சென்றது. நான் அந்தக்காலத்தில் பள்ளியில் இரண்டு கணித வகுப்புகளில் அமர்ந்திருப்பதைப் போல உணர்ந்தேன். நட்டா ஜியும் கையைத் தடவிக் கொண்டிருந்தார். ஆனால் மோடி ஜி அவரைப் பார்த்தவுடன் அவர் கவனமாகக் கேட்பது போல் பாவனை செய்யத் தொடங்கினார். அமித் ஷாவும் தலையில் கை வைத்து உட்கார்ந்துவிட்டார். பியூஷ் கோயல் ஜி தூங்கியே விட்டார். இது எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. பிரதமர் புதிதாக ஏதாவது சொல்வார் என்று நான் நினைத்தேன் என்று பிரியங்கா தெரிவித்தார்.

### இலங்கை அதிபர் இன்று இந்தியா வரும் நிலையில்

# ராமேசுவரம் மீனவர்களை விரட்டியடித்த சிங்கள படை

மண்டபம், டிச. 16-

இலங்கை அதிபர் இன்று இந்தியா வரும் நிலையில் ராமேசுவரம் மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் விரட்டியடித்த சிங்கள படையினர்.

வங்கக்கடலில் அடுத்தடுத்து உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த 10 நாட்களுக்கும் மேலாக ராமேசுவரம், மண்டபம், பாம்பன் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு செல்ல மீன்வளத்துறையினர் தடை விதித்திருந்தனர். அவர்களுக்கான அனுமதி டோக்கன் வழங்கப்படாத நிலையில் நேற்றுமுன்தினம் முதல் காற்றின் வேகம் குறைந்து இயல்பு நிலை திரும்பியது.

இதையடுத்து நேற்று முன்தினம் ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தில் இருந்து 377 விசைப்படகுகளில் 2,500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அனுமதி பெற்று கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். நள்ளிரவில் அவர்கள் கச்சத்தீவு அருகே வலைகளை விரித்துரு மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் விரட்டியடித்தனர். மீண்டும் இந்த பகுதியில் மீன்பிடித்தால் எல்லை தாண்டியதாக கைது செய்யப்படுவீர்கள் என்றும் ஒலிபெருக்கி மூலம் எச்சரித்தனர். உடனடியாக கைது நடவடிக்கைக்கு பயந்து ராமேசுவரம் மீனவர்கள் வலைகளை சுருட்டிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

இலங்கை அதிபர் அனுர குமார திசநாயகே இன்று இந்தியாவுக்கு அரசு முறை பயணமாக வரும் நிலையில் இலங்கை கடற்படையினர் இது போன்று தாக்குதல் நடத்தி மீனவர்களை விரட்டியடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்திய பிரதமர் இலங்கை அதிபரை சந்திக்கும் போது தமிழக மீனவர்கள் மீன்பிடி வாழ்வாதாரத்தை பாதுக்கும் வகையில் பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என மீனவ சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க வேண்டும். இதே போன்று தண்டனை கைதிகளாக உள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது வரை இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு 141 தமிழக மீனவர்கள் அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். அவர்களில் 45 பேர் விசாரணை கைதிகளாகவும், 96 பேர் தண்டனை பெற்றும் உள்ளனர்.

அவர்களுக்கு சொந்தமான 198 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

# செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது ஏன்?

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்

சென்னை, டிச. 16-

செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்தது ஏன்? என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம் அளித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டையில் ஆற்றோரம் வசிக்கும் முதியவர்களுக்கு அரிசி, பெட்ஷீட் ஆகியவற்றை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார். பின்னர் செம்பரம்பாக்கம் ஏரியில் தண்ணீர் திறப்பதற்கான காரணம் குறித்து அவர் பேசியதாவது:-

ஏரிகளை திறப்பதில் முதலமைச்சர் மிகவும் கவனமாக இருக்கிறார். கடந்த 2015-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த சம்பவத்தை யாரும் மறக்க முடியாது. செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவான 24 அடி உயரத்தில், 23.42 அடி உயரம் தண்ணீர் நிரம்பியுள்ளது. ஏரிக்கு 6 ஆயிரம் கன அடி நீர் வந்துகொண்டிருக்கிறது. நாளை (17-ம் தேதி) பெரிய மழைக்கு வாய்ப்புள்ளதாக கூறப்படும் நிலையில், செம்பரம்பாக்கம் ஏரியில் நீரை குறைக்காவிட்டால், கரை உடைந்து ஆபத்து ஏற்படக்கூடும். நீரை குறைப்பதால் செம்பரம்பாக்கம் ஏரியின் அளவு 22 அடியாக குறைந்து விடும். 17ம் தேதி மழை வந்தால் 2 அடி உள்வாங்கும் குடிநீருக்கு நிரம்பி இருக்கும் இதனால் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு விரைவில் புதிய பயிற்சிகள்

## ஐகோர்ட்டில் தமிழக அரசு தகவல்

சென்னை, டிச. 16-

பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு நிறுத்தப்பட்ட புக் பைண்டிங் பயிற்சி உட்பட மேலும் புதிதாக 7 பயிற்சிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளதாக உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய கூட்டமைப்பு தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது: சென்னை பூந்தமல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் ஆண்டு தோறும் 21 பேருக்கு புக் பைண்டிங் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், 'நூலகங்கள் கணினிமயம் ஆகிவிட்டதால் புக் பைண்டிங் பயிற்சி முடிக்கும் பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை' என்று கூறி அந்த பயிற்சியை தமிழக அரசு திடீரென நிறுத்திவிட்டது.

ஆனால், புக் பைண்டிங் பயிற்சியை முடிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு வழிகளில் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதால், நடப்பு கல்வி ஆண்டில் புக் பைண்டிங் பயிற்சியை மீண்டும் தொடங்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம், நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, மாநில அரசு ப்ளீடர் ஏ.எட்வின் பிரபாகர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை இயக்குநர் லட்சுமி சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அதில், புக் பைண்டிங் பயிற்சியை வரும் கல்வி ஆண்டு முதல் நிறுத்துவதாக அறிவித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை திரும்ப பெறப்பட்டுவிட்டது. பார்வை மாற்றுத் திறனாளிகளுக்காக புக் பைண்டிங் பயிற்சியுடன் மேலும் 7 புதிய பயிற்சிகள் விரைவில் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது' என்று அதில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கை முடித்துவைத்து உத்தரவிட்டனர்.

### கேரளாவில் கார் மீது பஸ் மோதி விபத்து;

# 4 பேர் பரிதாப பலி

பத்தனம்திட்டா, டிச. 16-

கேரளாவில் கார் மீது பஸ் மோதி விபத்து ஏற்பட்டதில், புதுமண தம்பதிகள் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

கேரளா மாநிலம், பத்தனம்திட்டா பகுதியில் சபரிமலை பக்தர்கள் சென்ற பஸ் மற்றும் கார் மோதி விபத்து ஏற்பட்டது. இதில், குடும்பத்துடன் திருவனந்தபுரம் விமான நிலையத்தில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த புதுமண தம்பதிகள் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் மற்றும் தீயணைப்புப் படையினர் காருக்குள் சிக்கியிருந்த 4 பேரையும் மீட்டனர். அவர்களது உடல் பிரேத பரிசோதனைக்காக, மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

போலீசார் விசாரணையில் புதுமண தம்பதிகள் மலேசியாவுக்கு குடும்பத்துடன் சுற்றுலா சென்று விட்டு, வீடு திரும்பும் போது விபத்து ஏற்பட்டது. புதுமண தம்பதிகள் பெயர் நிகில், அனு என போலீசார் அடையாளம் கண்டுபிடித்துள்ளனர். நிகில் கனடாவில் வேலை பார்த்து வந்துள்ளார்.

டிரைவர் தூங்கியது விபத்துக்கு காரணம் என போலீசார் தெரிவித்தனர். தமிழகத்தில் இருந்து பக்தர்கள் சென்ற பஸ்சில் பயணம் செய்த சிலர் மற்றும் டிரைவருக்கு லேசான காயம் ஏற்பட்டது. விபத்து குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். குவைத்தில் இருக்கும் நிகிலின் சகோதரி வீடு திரும்பியதும் நால்வரின் இறுதிச் சடங்குகள் நடைபெறும் என உறவினர்கள் தெரிவித்தனர்.

# சாதிவாரிய கணக்கெடுப்பு 96 சதவீதம் நிறைவடைந்தது

## தெலங்கானா முதல்வர் தகவல்

ஐதராபாத், டிச. 16-

தெலங்கானாவில் சாதிவாரிக் கணக்கெடுப்பு கடந்த மாதம் (நவ. 6) தொடங்கப்பட்டது. இந்த நிலையில், சாதிவாரிக் கணக்கெடுப்பு பணிகள் 98 சதவிகிதம் நிறைவுற்றுள்ளதாக அம்மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி தெரிவித்துள்ளார்.

ஐதராபாத்தில் குருமா சமூக நிகழ்ச்சியொன்றில் அவர் பேசியதாவது, தெலங்கானாவில் சமுதாய நலப் பரிசோதனையாக இந்த சாதிவாரிக் கணக்கெடுப்பு அமையும்.இதன்மூலம், திரட்டப்பட்டுள்ள தரவுகள் ஆளும் காங்கிரஸ் அரசால் பஞ்சாயத்து, சட்டப்பேரவை, மக்களவை தேர்தல்களில் குருமா சமூகத்தினரின் மக்கள்தொகைக்கேற்ப அவர்களுக்கான பிரதிநிதித்துவம் அதிகரிக்க வழிவகை செய்யும்'' என்றார்.

மேலும், பட்டியலினப் பிரிவில்(எஸ்சி) உள்ள உள்பிரிவுகள் குறித்த விவகாரத்தில் அமைச்சர் என். உத்தம் குமார் ரெட்டி தலைமையில் ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இதன் மூலம், மடிகா சமூகத்திற்கு சமூகநீதி கிடைக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்றார். அந்த சமூகத்தைச் சேர்ந்தோருக்கு மாநில அரசு நிறுவனங்களில் உயர் பொறுப்புகள் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

### விடுமுறை தினத்தை முன்னிட்டு

# ஒகேனக்கல்லில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

ஒகேனக்கல், டிச. 16-

விடுமுறை தினம் என்பதால் நேற்று ஒகேனக்கல் அருவியில் குவிந்த சுற்றுலா பயணிகளால் வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத்தலமான ஒகேனக்கல்லுக்கு கர்நாடகம், ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள். அவர்கள் அருவியில் குளித்தும், பரிசலில் சென்றும் மகிழ்ந்து செல்வார்.

இதனிடையே தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, பிலிகுண்டுலு, ராசி மணல் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்தது.

இதனால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 8 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. தற்போது காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது. இதனால் நீர்வரத்து நேற்றுமுன்தினம் காலை 8 மணி நிலவரப்படி 7 ஆயிரம் கனஅடியாக குறைந்து வந்தது. விடுமுறை தினத்தை முன்னிட்டு ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்தனர். முதலைப்பண்ணை, சிறுவர் பூங்கா உள்ளிட்ட பகுதிகளை சுற்றி பார்த்தனர். சுற்றுலா பயணிகள் குடும்பத்தினருடன் பரிசல் பயணமும் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

பின்னர் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்றவாறு காவிரி ஆற்றை கண்டு ரசித்தனர். இளைஞர்கள் எண்ணெய் மசாஜ் செய்து மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் காவிரி ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். குடும்பத்துடன் பூங்காவில் அமர்ந்து மீன் குழம்புடன் உணவு உண்டு மகிழ்ந்தனர். சாலையோரம் இருந்த கடைகளில் பொறித்து வைத்த மீன்களையும் ஆர்வமுடன் வாங்கி சாப்பிட்டனர்.

ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால் நடைபாதை, பஸ் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டமாகவே காணப்பட்டது. இதனால் மசாஜ் தொழிலாளர்கள், மீன் சமையலர்கள், பரிசல் ஓட்டிகள் உள்ளிட்ட தொழிலாளர்கள், வியாபாரிகள் மகிழ்ச்சியுடன் உள்ளனர். நீர்வரத்தை பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர்வளத் துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

### அமெரிக்காவில் விபத்து:

# இந்திய மாணவி பலி

வாஷிங்டன், டிச. 16-

அமெரிக்காவின் டென்னசி மாநிலம், மெம்பிஸ் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலையில் இந்திய மாணவர்கள் சென்ற கார் விபத்துக்குள்ளானது. இதில், நாக ஸ்ரீ வந்தன பரிமளா (வயது 26) என்ற மாணவி பரிதாபமாக உயிரிழந்தார். பவன், நிகித் ஆகியோர் பலத்த காயமடைந்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில், காரின் பிரேக் பிடிக்காததால் மற்றொரு கார் மீது மோதியதாக தெரிய வந்துள்ளது. விபத்தில் பலியான பரிமளா, இந்தியாவின் ஆந்திர மாநிலம் குண்டூரைச் சேர்ந்த தொழிலதிபரின் மகள் ஆவார். இவர் மேற்படிப்புக்காக 2022-ம் ஆண்டு அமெரிக்கா வந்துள்ளார்.

# அ.தி.மு.க.வில் கருத்து வேறுபாடா?

## முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் கேள்வி

சென்னை, டிச. 16-

அ.தி.மு.க.வில் கருத்து வேறுபாடு எங்கே இருக்கிறது என்று சி.வி. சண்முகம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுக் குழுவில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் பேசியதாவது:- புரட்சித் தலைவி அம்மா மறைவுக்கு பிறகு இந்த இயக்கம், அம்மா அரசு இருக்குமா? இருக்காதா? என்ற நிலையிலே, அந்த இக்கட்டான சூழ்நிலையில், ஒரு சோதனையான காலக் கட்டத்திலே இந்த இயக்கத்தை வழிநடத்துகின்ற ஒரு தொண்டனாக இருந்து தொண்டர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அம்மா ஆட்சியில் முதலமைச்சராக பொறுப்பேற்று 4.5 ஆண்டு காலம் ஒரு சிறப்பான ஆட்சியை கொடுத்த அரசு எடப்பாடியார் அரசாகும்.

அதற்கு பிறகு இந்த இயக்கத்திலே எதிரிகள் மட்டுமல்ல துரோகிகளால், பல்வேறு சோதனைகள் வந்தது, பிளவுபட்டது. சின்னம் முடக்கப்பட்டது. பல்வேறு சோதனைகளை சந்தித்தாலும் அதை எதிர் கொண்டு எந்தவித சேதாரமும் இல்லாமல் எக்கு கோட்டையாக அ.தி.மு.க. கழகம் இன்று இருப்பதற்கு முழு காரணம் ஆளுமை மிக்க நம்முடைய பொதுச்செயலாளர் எடப்பாடியார்.

ஒன்றை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். நம்மை தோற்கடிப்பதற்கு எவனும் இல்லை. தோற்கடிக்க முடியாது. நாம் நம்பிக்கையோடு இருக்க வேண்டும். நம்பிக்கைத்தான் நம் வெற்றிக்கு முதல்படி. அந்த நம்பிக்கையை சீர்குலைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு நம் மீது மறைமுகமாக, நேரடியாக தாக்குதல்கள் நடத்தி கொண்டி ருக்கிறார்கள். 2 கோடி தொண்டர்களை நம்பி இருக்கிற இயக்கம் அ.தி.மு.க. அன்றைக்கு இந்த எடப்பாடியார் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது எப்படி இருந்ததோ அதே எழுச்சி அதே ஆரவாரத்தோடு இன்றைக்கும் இருக்கிறது.

காது இருந்தும் கேட்காத செவிடர்களுக்கும், கண் இருந்தும் பார்க்காத குருடர்களுக்கும் நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள். இந்த மண்டபத்தில் நிரம்பி இருக்கிற இந்த தொண்டர்களை பாருங்கள். இங்கே எங்கே இருக்கிறது கருத்து வேறுபாடு? எங்கிருக்கிறது சலசலப்பு? சலசலப்பு வராதா? கருத்து வேறுபாடு வராதா? என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் இங்கே பாருங்கள். இந்த எழுச்சியை பாருங்கள்... இதுதான் 2026-ல் நம்முடைய அம்மாவின் ஆட்சி எடப்பாடியார் தலைமையில் அமையும்... அமையும். நம்முடைய பலம் நமக்கு தெரிகிறதோ இல்லையோ தி.மு.க.வுக்கு தெரியும். அ.தி.மு.க. தொண்டனுடைய பலம் தி.மு.க.வுக்கு தெரியும். அ.தி.மு.க.வில் கடைசி தொண்டன் இருக்கிற வரை அ.தி.மு.க.வை எந்த கொம்பன் மட்டுமல்ல 100 கருணாநிதி வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. நம்பிக்கையோடு, எழுச்சியோடு, உற்சாகத்தோடு நீங்கள் அனைவரும் தேர்தல் பணியாற்றி நம் அம்மாவின் ஆட்சியை எடப்பாடியார் தலைமையிலே அமைக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

### மழை வெள்ள நிவாரண நிதியாக

# குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும்

## திருமாவளவன் வலியுறுத்தல்

திருச்சி, டிச. 16-

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.5ஆயிரம் வழங்க வேண்டும் என்று திருமாவளவன் எம்.பி. பேட்டி கூறினார்.

திருச்சி விமான நிலையத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- சென்னையில் நடைபெற்ற எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' நூல் வெளியீட்டு விழாவில் பேசிய ஆதவ் அர்ஜூனா, தி.மு.க.வுக்கு எதிராக கடும் விமர்சனங்களை முன்வைத்தார். தி.மு.க.வுடனான கூட்டணியில் விசிக இருந்துவரும் நிலையில் ஆதவ் அர்ஜூனாவின் பேச்சு, அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

தொடர்ந்து கட்சியின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியதால், வி.சி.க.வில் இருந்து ஆதவ் அர்ஜூனா 6 மாத காலத்துக்கு இடைநீக்கம் செய்யப்படுவதாக அக்கட்சித் தலைவர் திருமாவளவன் அறிவித்தார்.

இதுதொடர்பாக ஆதவ் அர்ஜூனா வெளியிட்ட அறிக்கையில், அதிகாரத்தை ஒடுக்கப்பட்ட மக்கள் அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் வி.சி.கவில் எனது பயணத்தை தொடங்கினேன். நான் கட்சியில் என்ன பணி செய்தேன் என்பதை அடிமட்ட தொண்டர்கள் நன்கு அறிவர். ஒடுக்கப்பட்ட மக்களுக்கான 'ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு' என்ற முழக்கத்தை அந்த மக்களுக்கான அதிகாரம் கிடைக்கும் வரை தொடர்ந்து முழங்கிக் கொண்டு இருப்பதே நேர்மையான அரசியல். குறிப்பாக 'ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் கிடைத்து விடக் கூடாது என்று நினைக்கும் மனநிலைதான் மன்னர் பரம்பரைக்கான மனநிலை' என்பதை அழுத்தமாக இங்கு பதிவு செய்கிறேன். இந்த மக்களுக்கான அதிகாரத்தைத் தட்டிப்பறிக்கும் அந்த மனநிலையை, எதிர்காலத்தில் தேர்தல் பிரச்சாரத்தின் மூலம் உடைத்தெறியும் பணியில் ஈடுபடுவேன். சமூக அநீதிகளுக்கு எதிரான எனது குரல் சமரசமின்றி ஒலிக்கும்'' என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கட்சியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட பின்பும் தன்னை பற்றி பேசி வருவது குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு வி.சி.க. தலைவர் திருமாவளவன் பதில் அளித்துள்ளார். இதுதொடர்பாக அவர் பேசுகையில், ஆதவ் அர்ஜூனாவுக்கு ஏதோ ஒரு மறைமுக செயல் திட்டம் இருப்பதாக தெரிகிறது. இடைநீக்கம் செய்யப்பட்ட ஆதவ் தொடர்ந்து எதிர்மறையான கருத்துகளை தெரிவிக்கிறார். ஆதவ் இப்படி பேசி வருவதைப் பார்த்தால் அவருக்கு ஏதோ திட்டம் இருப்பது போல தெரிகிறது. இடைநீக்கம் என்பது வெறும் கண்துடைப்பு அல்ல. ஆதவ் அர்ஜூனா இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கும் சூழலில் மீண்டும் இதுபோன்ற சர்ச்சைக்குரிய கருத்துகளை சொல்லுவதே தவறு. அப்படி சொல்லக்கூடாது ஆதவ் அர்ஜூனா மீண்டும் வி.சி.க.வில் இயங்க வேண்டுமென நினைத்திருந்தால் 6 மாதங்கள் அமைதியாக இருந்திருப்பார்'' என்று திருமாவளவன் கூறினார். தொடர்ந்து பேசிய திருமாவளவன், மழை வெள்ள நிவாரண நிதியாக ரேஷன் அட்டைக்கு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும் என்றும் கால்நடைகள், பொருட்களின் சேதங்களுக்கு ஏற்ப நிவாரணத்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று அவர் கூறினார்.

# எம்.பி.பி.எஸ். சீட் எண்ணிக்கையில் 3-ம் இடத்திற்கு சரிந்தது தமிழ்நாடு

## மத்திய இணை அமைச்சர் தகவல்

புதுடில்லி, டிச. 16-

இளங்கலை மருத்துவ படிப்பான எம்.பி.பி.எஸ்., சீட் எண்ணிக்கையில் முதல் இடத்தில் இருந்த தமிழகம், 3ம் இடத்திற்கு தள்ளப்பட்டு உள்ளது. முதல் இடத்தை கர்நாடகா பிடித்துள்ளது. இளங்கலை மருத்துவப் படிப்பு இடங்களை மத்திய அரசு அதிகரித்துள்ளது. அதன்படி 2023-24ம் கல்வி ஆண்டில் 1,08,940 இடங்கள் இருந்த நிலையில், 2024-25ம் கல்வி ஆண்டில் 118,137 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த தகவலை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் அனுப்ரியா படேல் பார்லிமென்டில் பேசுகையில் தெரிவித்தார்.

இதில் 60,422 இடங்கள் அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், 57,715 இடங்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும் இடம்பெற்றுள்ளன. அதிக இளங்கலை மருத்துவ படிப்பு இடங்களை கொண்ட மாநிலம் விவரம் பின்வருமாறு:

கர்நாடகா 12,545, உத்தரபிரதேசம் 12,425, தமிழகம் 12,050, மஹாராஷ்டிரா 11,845, தெலுங்கானா 9,040, குஜராத் 7,250 ராஜஸ்தான் 6,475, ஆந்திரபிரதேசம் 6,785, மேற்குவங்கம் 5,475, கேரளா 4,905, மருத்துவ படிப்பு சீட் எண்ணிக்கையில் கடந்த 2023-24ம் கல்வி ஆண்டில் முதல் இடத்தில் இருந்த தமிழகம் 3ம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையாக பார்த்தால் உத்தரப் பிரதேசம் 86, மகாராஷ்டிரா 80, தமிழகம் 77, கர்நாடகா 73, தெலங்கானா 65 எனப் பெற்றுள்ளன.

அந்தமான் நிகோபார், அருணாசலப் பிரதேசம், சண்டிகர், தாத்ரா நாகர் ஹவேலி, கோவா, மிசோரம், மேகாலயா, நாகாலாந்து, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு மருத்துவக் கல்லூரி உள்ளது.

தமிழகத்தில் ஆறு மாவட்டங்களில் புதிய கல்லூரிகள் தொடங்க அனுமதி கோரி உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டும் என்பது அரசின் கொள்கை. மத்திய சுகாதாரத் துறை அமைச்சரை சந்திக்கும் ஒவ்வொரு முறையும் கோரிக்கை வைக்கப்படுவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

எம்.பி.பி.எஸ்., இடங்கள் எண்ணிக்கை பொறுத்தவரை, 11 மருத்துவக் கல்லூரிகளில் தலா 50 எம்.பி.பி.எஸ்., இடங்களை அதிகரிக்க மருத்துவ கவுன்சிலுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மருத்துவ கவுன்சில் அனுமதி வழங்கும் பட்சத்தில் வரும் கல்வி ஆண்டு முதல் கூடுதலாக 550 இடங்கள் தமிழகத்துக்கு கிடைக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



ஒரே நாடு என்று சொல்லிவிட்டால் தேசப்பற்று வந்துவிடுமா? தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 40 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக தேர்தலை நடத்தி முடித்தவர்கள், வட மாநிலங்களில் 10 கட்டம், 13 கட்டம் என்று பிரித்து வைத்து தேர்தலை நடத்தியது ஏன்?''

- சீமான்



தெலங்கானா, சத்யா திரையரங்கத்தில் புஷ்பா 2 திரைப்படத்தை காண வந்த பெண், கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்திருப்பது கவலை அளிக்கக் கூடியது. அதேநேரத்தில் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது காவல் துறையின் கடமையாற்ற தவறியது வருத்தத்தை அளிக்கிறது. இதில் யார் மீது தவறு என்று பார்த்து காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- தமிழிசை



டங்ஸ்டன் சுரங்கம் குறித்து ஒரு வருடத்திற்கு முன்பே புவியியல் ஆய்வு செய்யப்பட்டு கனிம வளம் குறித்து கண்டறியப்பட்டபோது, மாநில அரசு இங்கு சுரங்கம் அமைப்பதற்கு அப்போதே எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும். சுரங்கம் குறித்து பல போராட்டங்களுக்கு பிறகு தற்போதுதான் மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் பா.ஜ.க. நடவடிக்கை எடுக்கும்.

- சரத்குமார்



ஆவின் நிறுவனம், சில்லறை தட்டுப்பாடு காரணமாக 450 மி.லி ரூ. 25 என விலை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக ஒரு வினோதமான காரணத்தைக் கூறியிருக்கிறது. யாரை ஏமாற்ற முயல்கிறது ஆவின் நிறுவனம். ஆவின் கிரீன் மேஜிக் பிளஸ் பாலை அறிமுகம் செய்யும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும்.

- அன்புமணி




தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் கட போகத்தியில் இருந்து குபேரப்பட்டணம் செல்லும் சாலையில் சிற்றாற்றில் வெள்ளம் அதிகமாக வந்ததால் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான பாலம் பாதிப்படைந்துள்ளது. இதனை முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன் தலைமையில் ஒன்றிய செயலாளர் சீனித்துரை, ஒன்றிய சேர்மன் காவேரி சீனித்துரை, ஒன்றிய கவுன்சிலர் ஜான்சி ஜெபமலர் உள்ளிட்டோர் பார்வையிட்டனர்



கோவில்பட்டி வழக்கறிஞர் சங்கத் தலைவர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட அதிமுக வழக்கறிஞர் அணி மாவட்ட செயலாளர் ஜி.எம்.சங்கர் கணேஷ் சென்னையில் பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜை மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# கோவில்பட்டியில் அமமுக சார்பில் டிடிவி.தினகரன் பிறந்தநாள் விழா



**கோவில்பட்டி டிச16**

கோ வி ல் ப ட் டி யில் அத்தை கொண்டான் பகுதியில் உள்ள சங்கர கோமதி ஆலயத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் மாநில துணைப் பொதுச் செயலாளர் மாணிக்கராஜா தலைமையில் பொதுச் செயலாளர் தினகரன் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அன்னதானம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பிரைடல் வழிகாட்டுதலின் பேரில் நிகழ்ச்சிக்கு நகரச் செயலாளர் என். எல். எஸ். செல்வம் தலைமை வைத்தார்.

ஒன்றிய செயலாளர்கள் ஈஸ்வர பாண்டியன், விஜய பாஸ்கர், மகேந்திரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கிழவிபட்டி குமார் வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியில் முத்துப்பாண்டி, கந்தையா, பால் பாண்டி, கணேஷ் பாபு, கருப்பன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அம்மனுக்கு அபிஷேக அலங்காரதீப ஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை மாவட்ட அம்மா பேரவை செயலாளர் லட்சம் மிகச் சிறப்பாக செய்திருந்தார்.

# தென்காசியில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் நகராட்சி நிர்வாக இயக்குனர் ஆய்வு:நகர்மன்றத் தலைவர் சாதிர் பங்கேற்பு



**தென்காசி டிச.16**

நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு தென்காசி நகராட்சி பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் ஆய்வுநகர்மன்றத் தலைவர் சாதிர், நகராட்சி ஆணையாளர் பங்கேற்றனர்

நகராட்சி நிர்வாக இயக்குனர் சிவராசு தென்காசி நகராட்சி பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களையும், மழை வெள்ளத்தால் சேதமடைந்த நவீன எரிவாயு தகன மேடை மற்றும் மழையால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாமில் உள்ள பொது மக்களையும் சந்தித்தார். மேலும் தென்காசி நகர பகுதிமக்களுக்கு நீண்ட நாள் தேவையான தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்திற்கான சுமார் ₹107 கோடி மதிப்பீட்டிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுவதற்கான தேவையான நிதியை ஒதுக்கி தருமாறு நகர்மன்றத் தலைவர் வலியுறுத்தினார். மேலும் நகராட்சி நிர்வாக இயக்குனர் விரைவில் நிறைவேற்றி தருவதாகவும் உறுதி அளித்தார்.

இந்நிகழ்வில் தென்காசி நகர் மன்றத் தலைவர் சாதிர், நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன், நகராட்சி பொறியாளர் ஹசீனா, சுகாதார அலுவலர் முகம்மது இஸ்மாயில், சுகாதார ஆய்வாளர்கள் கணேசன், ஈஸ்வரன், நகர்மன்ற உறுப்பினர் சுமதி, இசக்கிரவி, துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள்

சுப்பிரமணியன், துரைசாமி, முத்துக்குமார், முத்துமாரியப்பன், கழகநிர்வாகிகள், நகரப்பொருளாளர் ஷேக்பரீத், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் தங்கபாண்டியன், வட்டக் கழகச் செயலாளர் சண்முகநாதன், அறங்காவலர் இசக்கிரவி, மாணவரணி மைதீன் , ராஜன், இளைஞரணி முரளி மற்றும் தன்னார்வலர்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள்பலர் கலந்து கொண்டனர்



தென்காசிநகராட்சிக்குஉட்பட்ட23வதுவார்டுமேலப்புலியூர் பகுதியில் பாரதிய ஜனதா கட்சி நகர்மன்ற உறுப்பினர் சுனிதா ஏற்பாட்டின் பேரில் ஜிவிஆர் கண் மருத்துவமனை சார்பாக கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.



தென்காசிதெற்குமாவட்டத்திற்குமழைவெள்ளபாதிப்புகளை ஆய்வு செய்ய வருகை தந்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலுவை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் வரவேற்றார். உடன் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# வாசுதேவநல்லூர் அருள்மிகு சிந்தாமணி நாதசுவாமி திருக்கோயிலில் பௌர்ணமி சேத்திரவல விழா



**தென்காசி டிச.16 :**

வாசுதேவநல்லூர் அருள்மிகு சிந்தாமணி நாதசுவாமி திருக்கோயிலில் பௌர்ணமி சேத்திரவல விழா வெகு விமர்சியாக நடைபெற்றது. சுவாமி சிவிகை நாயனார் கோவில் உட்பிரகாரம், வெளிபிரகாரம் மற்றும் மாட வீதியில் சிவனடியார்கள் சிவ கோஷம் முழங்க சில கைலாய வாத்திய முழக்கத்துடன் சுவாமி காளை வாகனத்தில் திருவீதி உலா நடைபெற்றது. திருவீதி உலாவில் சுற்றுவட்டார பகுதியில் உள்ள ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

விழாவில் செல்லப்பா. ராமச்சந்திரன். இசக்கி. பிரஸ் முருகன். பரமகுரு. மாரியப்பன். மணிகண்டன். சுரேஷ். மனோ. சூர்யா. சிவக்குமார். பிரவீன். மகேந்திரன். மாரி கணேஷ். மற்றும் விழா ஏற்பாட்டினை அர்த்தநாரீஸ்வரர் கைங்கரிய திருத்தொண்டார்கள் சமூக நல அறக்கட்டளை. சார்ந்த அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். விழா முடிவில். அருட்பிரசாதம் வழங்கப்பட்டது

# இலந்தைகுளம் மற்றும் கீழ நீலிதநல்லூரில் மழை பாதிப்புகள்: வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆய்வு



**சங்கரன்கோவில். டிச.16.**

சங்கரன்கோவில் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாக கனமழை பெய்தது. மழையினால் ஏற்பட்ட பாதிப்புகளை ராஜா எம்எல்ஏ தொகுதிகள் தொகுதியில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு சென்று ஆய்வு நடத்தி மழை பாதிப்புகளை சரி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேலநீலிதநல்லூர் ஒன்றியம் இலந்தைகுளம் மற்றும் கீழநீலிதநல்லூர் கிராமங்களில் கன மழை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து மழைநீர் தேங்கி இருந்த பகுதிகளில் உள்ள மழை நீரை அகற்ற நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார். தொடர்ந்து இலந்தைகுளம் கிராமத்தில் உடைந்த குளத்தை பார்வையிட்டு அதனை சரி செய்ய உடனடி நடவடிக்கை எடுத்தார். மழையினால் வீடு இடிந்த பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க அதிகாரிகளிடம் வலியுறுத்தினார். இந்த ஆய்வின் போது மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பெரியதுரை, வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன், கிராம நிர்வாக அலுவலர் தங்கப்பதுமை மகேஷ், ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ், கருத்தபாண்டி ,ஒன்றிய கவுன்சிலர் நாகராஜன், ஊராட்சி செயலாளர் பால்ராஜ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# தென்காசி நூலகத்தில் நிலவேம்பு கசாயம் வழங்கும் முகாம்



**தென்காசி டிச.16**

தென்காசி நூலகத்தில் நிலவேம்பு கசாயம் வழங்கும் விழா தற்போது தென்காசி பகுதியில் அதிக மழை பெய்து வருகிறது இதனால் மக்கள் உடல் நிலை பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடாது. என்பதற்காக தென்காசி மாவட்ட சித்த மருத்துவ பிரிவு சார்பில் மாவட்ட மைய நூலகத்தில் வைத்து வாசகர்கள் 200 நபர்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு அரசு சித்த மருத்துவர்கள் ஞான பொன்மலர் மேனகா, மருந்தாளுநர் உஷா நூலகத்திற்கு வருகை தந்து வாசகர்களுக்கு நிலவேம்பு கசாயத்தை வழங்கினார். நூலகத்தின் சார்பில் நூலகர்கள் அண்ணாமலைச்சாமி, சுந்தர், ஜூலியா ராஜசெல்வி, நிஷா, கஸ்தூரி மற்றும் வாசகர் கள் கலந்து கொண்டனர். வாசகர் வட்டம் சார்பில் நன்றி தெரிவித்தனர்

# கோவில்பட்டியில் தேங்கிய மழைநீர்: நள்ளிரவில் பணியாற்றிய கவுன்சிலர்: பொதுமக்கள் பாராட்டு



**கோவில்பட்டி டிச 16**

கோ வி ல் ப ட் டி யில் தொடர் மழை காரணமாக சுற்றுப்புற கிராமங்கள் மற்றும் நகர் புறப்பகுதிகளில் பல இடங்களில் மழை நீர் தேங்கி மக்கள் வெளியே வர முடியாத சூழ்நிலை இருந்தது. கோவில்பட்டி நகர மன்ற சேர்மன் கா. கருணாநிதி உத்தரவை தொடர்ந்து நகராட்சி துப்புரவு பணியாளர்கள் இரவு, பகல், பாராமல் பணியாற்றி வருகின்றனர். இந்த சூழ்நிலையில் தேங்கிய மழை நீரை நள்ளிரவிலும் கூட நகராட்சி துப்புரவு பணியாளர்களுடன் சேர்ந்து மழை நீரை அகற்ற கடுமையாக பணியாற்றிய கவுன்சிலரை பொதுமக்கள் பாராட்டி னர்.கோ வி ல் ப ட் டி யில் தொடர் வெள்ளம் காரணமாக கடலையூர் ரோடு, பங்களா தெரு, மில் தெரு, பழனி ஆண்டவர் கோவில் தெரு, பகுதிகளில் மழை நீர் தேங்கி பொதுமக்கள் வெளியே வர முடியாத நிலை தொடந்தது. இதனால் கோவில்பட்டி நகராட்சி 14வது வார்டு திமுக கவுன்சிலர் அமலி . ஜேஸ்மின் லூர்து மேரி தலைமையில் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் நள்ளிரவில் சென்று மழை நீரை அப்புறப்படுத்தினர். அருகில் திமுக சிறுபான்மை பிரிவு மாவட்ட இணை அமைப்பாளர் அமலி .அந்தோணி பிரகாஷ், மற்றும் ஏராளமான திமுகவினர் உள்ளனர். நள்ளிரவிலும் தூக்கத்தை பார்க்காமல் வீதி வீதியாக சென்று மக்கள் பணியாற்றிய கவுன்சிலரை பொதுமக்கள் பெரிதும் பாராட்டினர்.



கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையிலிருந்து சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை நடந்து செல்வதற்கான கண்ணாடி இழை தரைதள பாலம் அமைக்கும் பணியை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டார்.உடன் கலெக்டர் அழகுமீனா உள்ளார்.

# தென்காசி மாவட்டத்தில் மழை பாதிப்பு: அமைச்சர்கள் எ.வ.வேலு, சாத்தூர் ராமச்சந்திரன் தலைமையில் கலந்தாய்வு கூட்டம்



**தென்காசி டிச.16:**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் அமைச்சர்கள் எ.வ. வேலு கே.எஸ். எஸ்.ஆர்ராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் அரசு கூடுதல் தலைமை செயலாளர் மங்கத்ராம்சர்மா, முன்னிலையில் தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த நெடுஞ்சாலைகள்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் பொதுப்பணித்துறை அமைச்சர் (பொதுப்பணிகள், கட்டிடங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை) எ.வ. வேலு மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை அமைச்சர் .கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் அரசு கூடுதல் தலைமை செயலாளர் மங்கத்ராம்சர்மா, முன்னிலையில் தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

பின்னர் பொதுப்பணித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது,தென்காசி மாவட்டத்தில் நெடுஞ்சாலைகளில், சாலைகள், தரைப்பாலங்கள், மேம்பாலங்கள் உள்ளிட்டவைகளின் சேதாரங்கள் குறித்தும், மழையினால் பாதிக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைகளை உடனடியாக சரிசெய்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் எந்தவித இடையூறும் இல்லாமல் உடனடியாக சரிசெய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் நெடுஞ்சாலைத்துறை மூலம் நடைபெற்று வரும் சாலைப் பணிகள் குறித்தும், உயர்மட்டப் பாலங்கள், தரைப்பாலங்கள் மற்றும் மேம்பாலங்களில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்து உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தரவிடப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் 2021 -22 ஆம் ஆண்டு கொல்லம்-திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்று வரும் சாலைப்பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.உலக வங்கிக் கடன் உதவி மற்றும் மாநில அரசு நிதி மூலம் திருநெல்வேலி-செங்கோட்டை- கொல்லம் சாலையில் 47 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.322 கோடி மதிப்பீட்டில் இருவழித்தடத்தில் இருந்து நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகள் குறித்தும், புளியங்குடி முதல் கழுகு மலை வரை 34 கிலோ மீட்டர் நீளத்திற்கு நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகள் நடந்து வருவதாகவும், 2022-23 ஆம் ஆண்டு நிதிஆண்டில் தேசிய நெடுஞ்சாலை கொல்லம் – திருமங்கலம் சாலையில் இலஞ்சி குத்துக்கல்வலசை இடையே ரூ.53 கோடி மதிப்பீட்டில் ரயில்வே மேம்பால பணி முழுவீச்சில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர்., சட்டமன்ற உறுப்பினர் ராஜா, சட்டமன்ற உறுப்பினர் மரு.சதன்திருமலைக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலைகள்) சத்யபிரகாஷ், சிறப்புஅலுவலர் (தொழில்நுட்பம்) சந்திரசேகரன், கண்காணிப்புப் பொறியாளர் ஜெயராணி, தென்காசி கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைகள்) சுரேஷ்பாபு, தேசிய நெடுஞ்சாலைகள் கண்காணிப்பு பொறியாளர் சாந்தி மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் அரசு மருத்துவமனையை அணுகி சிகிச்சை பெறலாம்

## கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

**தென்காசி,டிச.16-**

தென்காசி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் காய்ச்சல், சளி இருப்பவர்கள் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளை அணுகி தகுந்த சிகிச்சை பெற வேண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் காய்ச்சல், சளி, இருமல் முதலான நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனைத் தடுக்கும் பொருட்டு நடமாடும் மருத்துவமனை மூலம் மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பொதுமக்கள் அனைவரும் குடிநீரை நன்கு காய்ச்சி ஆற வைத்து அருந்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் காய்ச்சல், சளி இருப்பவர்கள் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளை அணுகி தகுந்த சிகிச்சை பெற அறிவுறுத்தப்படுகின்றனர். பொதுமக்கள் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் நேரடியாக மருந்து கடைகளில் மாத்திரைகள் வாங்கி சாப்பிட வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது. காய்ச்சல், சளி, இருமல் உள்ளவர்கள் முகக்கவசம் அணிய அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலும், டெங்கு காய்ச்சலை தடுக்க மழைநீர் மற்றும் நீர்சேமித்து வைக்கும் பாத்திரங்களில் கொசு புகாதவாறு மூடி வைக்கவும், வீட்டின் சுற்றுப்புறங்களில் உள்ள உபயோகமற்ற பொருட்களை மழைநீர் விழாத இடங்களில் சேகரித்து வைக்கவும், உபயோகமற்ற பொருட்களை அவ்வப்போது அப்புறப்படுத்தவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எலிகாய்ச்சலால், மஞ்சள் காமாலை நோய் ஏற்படலாம். ஆகவே மஞ்சள்காமாலை நோய் அறிகுறிகள் காணப்படும் நபர்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள பரிசோதனை வசதிகளை பயன்படுத்தி முறையான சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

# வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அறிவித்த 252 திட்டங்களில் பெரும்பாலான திட்டங்கள் டிசம்பர் 2025க்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்:அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி





**சென்னை,டிச.16**

முதலமைச்சர் அவர்களால் 4.12.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்ட வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் விரிவாக்கப் பணிகளான புதிய குடியிருப்புத் திட்டப் பணிகளை (14.12.2024) சென்னை, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் அமைக்கப்பட்டு, நடைபெற்று வரும் 700 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளையும் மற்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவமனை, தங்கசாலை மேம்பாலம் அருகில் நடைபெற்று வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளையும் அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு களஆய்வு செய்தார்.

அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான.பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது : முதலமைச்சர் அவர்கள் கடந்த 14.03.2024 அன்று சென்னை, தங்கச் சாலையில் ரூபாய் 2,097 கோடி மதிப்பீட்டிலான 87 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்கள். இத்திட்டமானது பல்வேறு துறைகளின் சார்பில் விரிவடைந்து தற்போது ரூபாய் 6,309 கோடி மதிப்பீட்டில் 252 திட்டங்களாக அதிகரித்துள்ளது. அதன் தொடர்ச்சியாக, வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் இரண்டாவது கட்டமாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 04.12.2024 அன்று சென்னை, வால்டாக்ஸ் சாலையில் ரூ.1,383 கோடி மதிப்பீட்டிலான 79 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 700 புதிய குடியிருப்புகளுக்கான பணிகள் மற்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவமனை, தங்கசாலை மேம்பாலம் அருகில் 776 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளை தொடங்கி வைத்தார்கள்.இந்த அரசை பொறுத்தளவில் சொன்னதைத்தான் செய்வோம், செய்வதை தான் சொல்வோம் என்ற அந்த வார்த்தைக்கு இணங்க நம் தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்த கட்டுமான பணிகள் இங்கு நடைபெறுவதை எங்கள் துறையினுடைய செயலாளர்காகர்லா உஷா, மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர்கட்டா ரவி தேஜா, இன்றைக்கு நேரடியாக கள ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டப்பணிகள் அனைத்தையும் நேரடியாக களத்திற்கு சென்று, அனைத்து பணிகளையும் முடக்கி விடுகின்ற சூழலை உருவாக்கிக் கொண்டு, தினந்தோறும் கள ஆய்வு மேற்கொண்டு வருகிறோம். இந்த திட்டங்கள் என்பது ஒட்டுமொத்தமாக 252 திட்டங்கள் என்றாலும் இந்த 252 திட்டங்களில் பெரும்பாலான திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு டிசம்பர் 2025 இறுதிக்குள் கொண்டு வருவதற்குண்டான அனைத்து பணிகளும் தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் போன்ற அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து இந்த திட்டப்பணிகளை விரைவுப்படுத்துகின்ற முயற்சியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவில்லை என்ற கேள்விக்கு அமைச்சர்பி.கே.சேகர்பாபு பதில்;எதிர்கட்சி தலைவர் அவர்கள் நின்று கொண்டிருக்கின்ற அரசியல் தளம் அப்படிப்பட்டது. அவர் குறைகளை சொல்லிக் கொண்டுதான் இருக்க வேண்டும். அவர் சொல்லுகின்ற குறைகள் உண்மை இருப்பின் முதலமைச்சர் அவர்கள் குறைகள் யாரிடம் வருகிறது என்பது பேச்சு முக்கியமில்ல, பாதிப்பு இருந்தால் உண்மையாக எங்கெல்லாம் அபயக் குரல் கேட்கின்றதோ, அங்கெல்லாம் ஆதரவு கரம் நீட்டுபவர் எங்களுடைய தமிழக முதல்வர் அவர்கள். பெஞ்சல் புயலின் பாதிப்புக்கு ஏற்றார் போல் நிச்சயம் தமிழக முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசு வஞ்சித்தாலும் நிவாரண நிதி வழங்குவதில் தடை ஏதும் இருக்காது. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி வழங்குவது சூழ்நிலைக்கு ஏற்றார் போல் முதல்வர் அவர்கள் முடிவு எடுப்பார். நிச்சயம் எல்லோருக்கும் எல்லாம் என்ற அரசு தான் இந்த அரசு. என்றார்.

**கலந்து கொண்டோர்**

இந்த ஆய்வுகளின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர்.காகர்லா உஷா, மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர்.கட்டா ரவி தேஜா, பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர்மணிவண்ணன், மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமலு, மண்டல அலுவலர்.பரிதா பானு, சிஎம்டிஏ கண்காணிப்பு பொறியாளர்ராஜமகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர்.இளம்பருதி, மாநகராட்சி செயற்பொறியாளர்லோகேஸ்வர், மாமன்ற உறுப்பினர்கள்.ராஜேஷ் ஜெயின்நவீன் தாஹா, பரிமளம்,.எம்.இஸட்.ஆசாத்எம்.இஸட்.ஆசாத் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# செங்கோட்டையில் ஈவிகேஎஸ் இளங்கோவன் மறைவையொட்டி இந்தியா கூட்டணி கட்சி சார்பில் இரங்கல் கூட்டம்



**செங்கோட்டை,டிச.16-**

செங்கோட்டை தாலுகா அலுவலகம் முன்பு வைத்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவரும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான ஈவிகே எஸ்.இளங்கோவன் மறைவை முன்னிட்டு இண்டியா கூட்டணி கட்சியின் சார்பில் இரங்கல் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு நகர காங்கிரஸ் தலைவர் ராமர் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பு செயலாளர் ஜோதிலிங்கம் திமுக நகர செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன் இந்திய கம்யூனிஸ்ட் நகர செயலாளர் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலைவகித்தனர். கூட்டத்தில் இளங்கோவன் மறைவுக்கு 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டு அவரது திருவுருவ படத்திற்கு நிர்வாகிகள் மலர் துாவி மரியாதை செய்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் செண்பகம் திமுக தலைமைகக்கழக பேச்சாளர் குத்தாலிங்கம் நகர்மன்ற உறுப்பினர்கள் முருகையா மேரி நகர காங்கிரஸ் துணைத் தலைவர்கள் காதர்அலி, கோதரிவாவா, மாரியப்பன் நகர பொதுச்செயலாளர் இசக்கியப்பன் நகர செயலாளர் நடராஜன் நகர பொருளாளர் சங்கரலிங்கம் நகர மகளிர் அணி தலைவி முத்துலட்சுமி நகர சிறுபான்மை பிரிவு தலைவர் சித்திக் நகர இளைஞர் காங்கிரஸ் செயலாளர் பாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் .தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகத் துறை மாவட்ட பொதுச் செயலாளர் ராஜீவ்காந்தி நன்றி கூறினார்.

# தென்காசி மாவட்டம் தெற்குமேட்டில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



**தென்காசி,டிச.16-**

தென்காசி மாவட்டம் புளியரை அருகே தெற்குமேட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகி டி.பி.வி.வி. விபின் சக்கரவர்த்தி தலைமையேற்று நலத்திட்ட உதவிகளையும் உறுப்பினர் அடையாள அட்டைகளையும் வழங்கினார்.

தெற்குமேட்டில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை தமிழக வெற்றிக் கழக நிர்வாகி முத்துக்குமரன், விஷால், அய்யாதுரை, யோனாக், நண்பன் ராஜ் ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் சிவா, முகம்மதுகான், மாரியப்பன், கீழப்பாவூர் சரவணன், இமானுவேல், பத்மநாபன், ரமேஷ், கணேசன், கார்த்தி, லட்சுமி காந்த் பாபு, மேலகரம் மாதவராஜ், சந்துரு, ஸ்ரீ இசக்கி, சுந்தர், தேவ சகாயம், ஜெயபிரகாஷ், உள்ளிட்ட தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் பகுதியில் டீ கடையில் கத்தியைக் காட்டி மிரட்டி பணம் பறித்த வாலிபர் கைது

**சென்னை டிச 16-**

சென்னை, அண்ணாநகர் மேற்கு, 18வது மெயின் ரோட்டில் வசித்து வரும் கார்த்திக், என்பவர் அதே பகுதியில் டீ கடை வைத்து நடத்தி வருகிறார். கடந்த 13 ந் தேதி அன்று இரவு, அடையாளம் தெரியாத 2 பேர் மேற்படி டீக்கடைக்குள் நுழைந்து, கார்த்திக்கிடம் பணம் ரூ.4,000/- தர வேண்டும் என்று கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளனர். கார்த்திக் பணம் தர மறுக்கவே, அவரை கத்தியால் தாக்கி, பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.300/- எடுத்துக் கொண்டு, கொலை மிரட்டல் விடுத்து, தப்பிச் சென்றனர். இச்சம்பவம் குறித்து கார்த்திக், திருமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

திருமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் சம்பவ இடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட விக்னேஷ்வரன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து பணம் ரூ.200/- மற்றும் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி விக்னேஷ்வரன் என்பவர் மீது ஏற்கனவே 1 கொலைமுயற்சி, 1 அடிதடி என 2 குற்ற வழக்குகள் உள்ளதும், குண்டர் தடுப்பு காவல் சட்டத்தில் சிறை சென்று, தற்போது ஜாமினில் வெளியே வந்துள்ளதும் தெரியவந்தது.

மேலும் மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட ஒரு தலைமறைவு குற்றவாளியை தனிப்படை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரி விக்னேஷ்வரன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352 Ph: 0462- 2486789 E-Mail: nellaiedi@thinaboomi.com RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தலைகவசம் உயிர் கவசம்

# புளியந்தோப்பு பகுதியில் வாலிபரிடம் வழிப்பறி செய்தவர் கைது

**.சென்னை டிச 16-**

சென்னை, புளியந்தோப்பு, திரு.வி.க நகர், 9வது தெரு, எண்.16 என்ற முகவரியில் வசித்து வரும் ரகு, என்பவர் மாடு தொட்டியில் வேலை செய்து வருகிறார். ரகு 13.ந் தேதி அன்று இரவு தனது பாட்டி வீட்டிற்கு சென்று விட்டு புதுபாலம் அருகில் நடந்து வந்து கொண்டிருந்த போது, அங்கு வந்த நபர் ஒருவர் மேற்படி ரகுவை வழிமறித்து அவதூறாக பேசி, கையால் தாக்கி, கத்தியை காட்டி மிரட்டி அவரிடமிருந்து பணம் ரூ.1,600/- மற்றும் கையில் அணிந்திருந்து கைக்கடிகாரத்தை பறித்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளார். இது குறித்து ரகு புளியந்தோப்பு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்க்கொண்டனர்.புளியந்தோப்பு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட சின்ன அப்பு (எ) பிரதீப், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ.1,000/-, கைக்கடிகாரம் மற்றும் 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட சின்ன அப்பு (எ) பிரதீப் மீது ஏற்கனவே 8 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட சின்ன அப்பு (எ) பிரதீப் விசாரணைக்குப்பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஏசி பெட்டிகளுடன் மின்சார ரயில் ஜனவரியில் பயன்பாட்டிற்கு வருகிறது

**சென்னை டிச 16-**

புறநகர் மின்சார ரயில்களில் ஏசி வசதி கொண்ட ரயில்களை இயக்க வேண்டும் என்ற கோரிக்கை பயணிகள் மத்தியில் நீண்ட நாட்களாக முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், வரும் ஜனவரி மாதத்தில் இருந்து ஏசி மின்சார ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்னையில் புறநகர் மின்சார ரயில்கள் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. தாம்பரம், செங்கல்பட்டு உள்ளிட்ட நகரங்களில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கான பயணிகள் சென்னைக்குள் பல்வேறு காரணங்களுக்கு வந்து செல்கிறார்கள். இவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக இருப்பது புறநகர் மின்சார ரயில்கள்தான். சென்னையில் ஆவடி- சென்ட்ரல், கடற்கரை – வேளச்சேரி, கடற்கரை- தாம்பரம்- செங்கல்பட்டு ஆகிய வழித்தடங்களில் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதில் சென்னை கடற்கரை – தாம்பரம் வழித்தடத்தில்தான் அதிக ரயில்கள் இயக்கப்படுகின்றன.கிண்டி, மாம்பலம், எழும்பூர் உள்ளிட்ட முக்கிய பகுதிகள் வழியாக இந்த ரயில்கள் இயக்கப்படுவதால் பயணிகள் கூட்டம் எப்போதும் அலைமோதும். சில நிமிடங்கள் ரயில்கள் தாமதம் ஆனால் கூட ரயில் நிலையத்தில் எதோ திருவிழா கூட்டம் போல எங்கு பார்த்தாலும் பயணிகள் கூட்டம் அலைமோதும். அந்த அளவுக்கு சென்னை சிட்டிக்குள் மிக முக்கிய ரூட்டாக இது உள்ளது. புறநகர் ரயில்களில் பயணிகளின் வசதியை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக புறநகர் மின்சார ரயில்களில் ஏசி வசதி கொண்ட ரயில்களை இயக்க வேண்டும் என்ற கோரிக்கை பயணிகள் மத்தியில் நீண்ட நாட்களாக முன்வைக்கப்பட்டு வருகிறது. புறநகர் மின்சார ரயில்களில் அலுவலகம் செல்வோர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயணிப்பதால் ஏசி வசதி கொண்ட ரயில்கள் இயக்கினால் எந்த களைப்பும் இல்லாமல், எளிதாக பயணிக்க முடியும் என்பதும், பயணிகள் ஏசி வசதி கொண்ட மின்சார ரயில்கள் எப்போது இயக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.ஏசி கோச்கள் கொண்ட ரயில் பெட்டிகள் தயாரிக்கும் பணி சென்னை ஐசிஎப்பில் நடைபெற்றது. இதற்கான பணி முடிவடைந்துள்ள நிலையில், வரும் ஜனவரி முதல் மின்சார ஏசி ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அதிகாரிகள் கூறியுள்ளனர். 12 பெட்டிகள் கொண்ட இந்த ஏசி மின்சார ரயில்கள், சென்னை – செங்கல்பட்டு, மூர் மார்க்கெட் – ஆவடி, அரக்கோணம், கும்மிடிப்பூண்டி ஆகிய ரூட்களில் இயக்கப்பட உள்ளதாக சென்னை பிராந்திய மேலாளர் (டிஆர்.எம்) தெரிவித்துள்ளார். வேளச்சேரி – கடற்கரை ரூட்டில் மட்டும் ஏசி ரயில்கள் இயக்கப்படாது எனவும், ஏனெனில் இந்த வழித்தடத்தில் 9 பெட்டிகள் கொண்ட ரயில்கள் மட்டுமே இயக்கும் வசதி இருப்பதாகவும் கூறினார். இந்த ரயில்களில் கட்டணம் என்று பார்த்தால், 10 கி.மீ வரை ₹29 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல ஏசி புறநகர் ரயிலில் 11-15 கி.மீ தொலைவுக்கு ₹37 கட்டணமாகவும், 16-25 கி.மீ தொலைவுக்கு ₹65 கட்டணமாக நிர்ணயிக்கப்படும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



காஞ்சிபுரம் மாவட்டம், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்படுவதை, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி, ஸ்ரீ பெரும்புத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் செல்வப்பெருந்தகை உடனிருந்தனர்.

# போதைப்பொருள் வைத்திருந்த வழக்கில் மேலும் 5 பேர் கைது

**சென்னை டிச 16-**

சென்னை பெருநகர காவல், சிஎம்பிடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், தனிப்படை போலீசார் கோயம்பேடு, பஸ் நிலைய உள் நுழைவு வாயில் அருகே மெத்தம்பெட்டமைன் என்கிற போதைப்பொருள் வைத்திருந்த 1.தொல்காப்பியன், 2.அர்ஜுன் கார்த்திக்கேயா, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலும், கோயம்பேடு சிஎம்பிடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் தீவிர விசாரணை செய்து, கோயம்பேடு, கேம்ஸ் வில்லேஜ் சிக்னல் அருகே, மேற்கண்ட எதிரிகளுடன் சம்பவத்தில் தொடர்புடைய 3.வேந்தன், 4.சரண், 5.மனோஜ், 6.சிபிராஜ், 7.ராகுல், ஆகிய 5 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து மொத்தம் 20 கிராம் எடை கொண்ட மெத்தம்பெட்டமைன், 210 கிராம் கஞ்சா, 2 செல்போன்கள் மற்றும் 2 சிறிய டிஜிட்டல் எடை இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

# மூதாட்டியிடம் தங்கச்சங்கிலியை பறித்தவர் கைது

**சென்னை டிச 16-**

சென்னை, எம்.ஜி.ஆர். நகர். பாலை தெருவில் ரத்தினம்மாள், என்ற மூதாட்டி தனியாக வசித்து வருகிறார். ரத்தினம்மாள் அவரது வீட்டு வாசலில் அமர்ந்திருந்தபோது, அங்கு வந்த ஒரு நபர் ரத்தினம்மாளிடம் துண்டு காகிதத்தை காண்பித்து முகவரி கேட்பதுபோல நடித்து, ரத்தினம்மாள் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 1 ½ சவரன் தங்கச்சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றார். இது குறித்து ரத்தினம்மாள் எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி சங்கிலி பறிப்பு குற்றத்தில், ஈடுபட்ட அபிஷேக், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் சுமார் 1 ½ சவரன் தங்கச்சங்கிலி பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி அபிஷேக் மீது ஏற்கனவே 1 கஞ்சா வழக்கு உள்ளது தெரியவந்தது.

# சென்னை புழல் சிறை உள்பட 3 மத்திய சிறைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை டிச 16-**

சென்னை காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.சிறை வளாகங்களில் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.சென்னையில் உள்ள புழல் மத்திய சிறை மற்றும், திருச்சி, மதுரை மத்திய சிறைகளுக்கு தொலைப்பேசி மூலம் மர்ம நபர் வெடிகுண்டு விடுத்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சென்னை காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தொடர்பு கொண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.இதைதொடர்ந்து, சிறை வளாகங்களில் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.மேலும், தொலைப்பேசியில் சிறைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர் குறித்து போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரியலூர் மாவட்டத்தில் 696 ஏரிகள், குளங்கள் முழு கொள்ளளவை எட்டியுள்ளது

**அரியலூர்,டிச.16**

அரியலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை, நீர்வளத்துறை, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் மொத்தம் 2,481 ஏரிகள் மற்றும் குளங்கள், நீர்பாசன குளங்கள் உள்ளிட்ட நீர் சேமிப்பு நிலைகள் உள்ளது. வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து கடந்த இரு தினங்களாக அதிகளவு மழை பெய்துள்ளதால் இவற்றில் 696 ஏரிகள் மற்றும் குளங்கள் 100 சதவீதம் கொள்ளவை எட்டியுள்ளது. இதேபோன்று, 91 முதல் 81 சதவீதம் வரையில் 421 ஏரிகள் மற்றும் குளங்களும், 71 முதல் 51 சதவீதம் வரையில் 912 ஏரிகள் மற்றும் குளங்களும், 50 சதவீதத்திற்கு குறைவாக 452 ஏரிகள் மற்றும் குளங்களும் நீரம்பியுள்ளன.

## மகளிர் ஐ.பி.எல். மினி ஏலம்:

# தமிழ்நாடு வீராங்கனை கமலினியை ரூ.1.60 கோடிக்கு வாங்கியது மும்பை

**மும்பை, டிச. 16-**

மகளிர் ஐபிஎல் தொடருக்கான மினி ஏலத்தில் 16 வயது தமிழக விக்கெட் கீப்பர் வீராங்கனை ஜி கமலினியை ரூ.1.60 கோடிக்கு மும்பை அணி வாங்கியுள்ளது.



**மினி ஏலத்தில்...**

மகளிர் ஐபிஎல் தொடருக்கான மினி ஏலத்தில் 16 வயது தமிழக விக்கெட் கீப்பர் வீராங்கனை ஜி கமலினியை ரூ.1.60 கோடிக்கு மும்பை அணி வாங்கியுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) சார்பில் மகளிர் ஐபிஎல் (டபிள்யுபிஎல்) 2025 தொடருக்கான வீராங்கனைகள் ஏலம் பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று வருகிறது. பெரும்பாலான அணிகள் முக்கிய வீராங்கனைகளை தக்க வைத்துள்ளனர். எனவே, 19 இடங்களுக்கு மட்டுமே ஏலம் நடைபெற்று வருகிறது.

**ரூ.1.60 கோடிக்கு...**

இந்த நிலையில் மினி ஏலத்தில் 16 வயது தமிழக விக்கெட் கீப்பர் வீராங்கனை ஜி கமலினியை ரூ.1.60 கோடிக்கு மும்பை அணி வாங்கியுள்ளது. முன்னதாக ஏலத்தில் கமலினிக்கு ரூ.10 லட்சம் அடிப்படை விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவரை ரூ.1.60 கோடிக்கு மும்பை அணி ஏலம் எடுத்துள்ளது. இதேபோல் சிம்ரன் ஷேக்கை ரூ. 1.90 கோடிக்கும் டியான்ட்ரா டாட்டினை ரூ 1.70 கோடிக்கும் குஜராத் ஜெயண்ட்ஸ் வாங்கியுள்ளது. ஐபிஎல் போன்று மகளிர் கிரிக்கெட்டை மேம்படுத்த பிசிசிஐ சார்பில் மகளிர் ஐபிஎல் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு தற்போது அதிக வரவேற்பு கிட்டி வருகிறது.

## பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டி:

# வலுவான நிலையில் ஆஸ்திரேலியா

**பிரிஸ்பேன், டிச. 16-**

பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 7 விக்கெட்டை இழந்து 405 ரன்கள் குவித்து வலுவான நிலையில் உள்ளது.




மழையால் பாதிப்பு...

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் ஆட்டத்தில் இந்தியாவும், 2வது ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும் வெற்றி பெற்றுள்ளன. இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் மழையால் பாதிக்கப்பட்ட முதல் நாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 13.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 28 ரன்கள் எடுத்திருந்தது. கவாஜா 19 ரன்களுடனும், மெக்ஸ்வீனி 4 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

நிதானமாக ஆடி....

இந்த நிலையில், 2வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் ஆஸ்திரேலியா தொடர்ந்து பேட்டிங் செய்தது. ஆஸ்திரேலியா தரப்பில் மெக்ஸ்வீனி 9 ரன்னிலும், கவாஜா 21 ரன்னிலும் அவுட் ஆகினர். தொடர்ந்து களம் இறங்கிய லபுசேன் 12 ரன்னில் அவுட் ஆனார். இதையடுத்து ஸ்டீவ் ஸ்மித் மற்றும் டிராவிஸ் ஹெட் ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தனர். இந்த இணையை பிரிக்க முடியாமல் இந்திய அணியினர் திணறினர்.

**இருவரும் சதம்...**

மறுபுறம் நிதானமாக ஆடிய இருவரும் சதம் அடித்து அசத்தினர். இதில் ஸ்மித் 101 ரன்னிலும், டிராவிஸ் ஹெட் 152 ரன்னிலும் அவுட் ஆகினர். இதையடுத்து களம் புகுந்த மிட்செல் மார்ஷ் 5 ரன், கம்மின்ஸ் 20 ரன் எடுத்து அவுட் ஆகினர். தொடர்ந்து அலெக்ஸ் கேரி மற்றும் மிட்செல் ஸ்டார்க் ஜோடி சேர்ந்தனர். இருவரும் மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்து கொண்டனர். இறுதியில் 2ம் நாள் ஆட்ட நேர முடிவில் ஆஸ்திரேலியா 7 விக்கெட்டை இழந்து 405 ரன்கள் குவித்துள்ளது. ஆஸ்திரேலியா தரப்பில் அலெக்ஸ் கேரி 45 ரன்னுடனும், ஸ்டார்க் 7 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் பும்ரா 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இன்று 3ம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது.

## இங்கிலாந்துக்கு எதிரான 3வது டெஸ்ட்:

# 2-ம் நாள் முடிவில் நியூசி. 340 ரன்கள் முன்னிலை



**ஹாமில்டன், டிச. 16-**

இங்கிலாந்து கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இதில் முதல் இரு போட்டிகளில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றிவிட்டது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி ஹாமில்டனில் நடைபெற்று வருகிறது.

**9 விக்கெட்டுகளை...**

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 315 ரன்கள் எடுத்திருந்தது. நியூசிலாந்து தரப்பில் சாண்ட்னெர் 50 ரன்னுடனும், வில்லியம் ஓ ரூர்க் ரன் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

**347 ரன்னுக்கு அவுட்...**

இங்கிலாந்து தரப்பில் மேத்யூ பாட்ஸ், கஸ் அட்கின்சன் தலா 3 விக்கெட் வீழ்த்தி இருந்தனர். நேற்று 2ம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் தொடர்ந்து பேட்டிங் செய்த நியூசிலாந்து தனது முதல் இன்னிங்சில் 347 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணியினர், நியூசிலாந்தின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 143 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.

**மேட் ஹென்றி...**

இங்கிலாந்து தரப்பில் ரூட் 32 ரன்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 4 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து 204 ரன்கள் முன்னிலையுடன் நியூசிலாந்து தனது 2வது இன்னிங்சை தொடங்கியது. நியூசிலாந்து தரப்பில் டாம் லாதம், வில் யங் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினர். இதில் டாம் லாதம் 19 ரன்னில் அவுட் ஆனார். இதையடுத்து வில்லியம்சன் களம் இறங்கினார்.

**வில்லியம்சன்....**

வில் யங் - வில்லியம்சன் இணை நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தது. இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். இதில் வில் யங் 60 ரன்கள் எடுத்து அவுட் ஆனார். இறுதியில் 2ம் நாள் ஆட்ட நேர முடிவில் நியூசிலாந்து தனது 2வது இன்னிங்சில் 3 விக்கெட்டை இழந்து 136 ரன்கள் எடுத்துள்ளது. நியூசிலாந்து தரப்பில் வில்லியம்சன் 50 ரன்னுடனும், ரச்சின் ரவீந்திரா 2 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து தரப்பில் பென் ஸ்டோக்ஸ் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். நியூசிதற்போது வரை 340 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது.

# 2026-க்குள் நக்சல்களை ஒழிப்போம்: அமித்ஷா

**ராஞ்சி, டிச. 16-**

சத்தீஸ்கரில் வருகிற 2026 ஆம் ஆண்டுக்குள் நக்சல்களை முழுவதுமாக ஒழிக்க உறுதியளிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சத்தீஸ்கர் காவல்துறையின் 25 ஆண்டுகால தன்னலமற்ற சேவை மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரித்து, நேற்று 'குடியரசுத் தலைவரின் காவல் வண்ண' விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நக்சல்களுக்கு எதிரான காவல்துறையின் நடவடிக்கை, மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அவர்கள் மேற்கொண்ட அயராத முயற்சிகளை அங்கீகரித்து இந்த விருதுகள் வழங்கப்படுகிறது. இதில் கலந்துகொள்ள 3 நாள்கள் பயணமாக உள்துறை அமைச்சர் அமித் ஷா சத்தீஸ்கர் சென்றுள்ளார். அவர் ஜக்தல்புருக்குச் சென்று, சரணடைந்த மாவோயிஸ்ட்கள் மற்றும் அங்கிருக்கும் மக்களைச் சந்தித்தார்.

இந்த நிகழ்வில் பேசிய அமித் ஷா, "நான் சத்தீஸ்கர் மக்களுக்கு உறுதியளிக்கிறேன். நீங்கள் சத்தீஸ்கர் முதல்வர் விஷ்ணு தேவ் சாய் தலைமை மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். நாங்கள் 2026 மார்ச் மாதத்துக்குள் நக்சல்களை மாநிலத்தில் இருந்து ஒழிக்க உறுதியாக இருக்கிறோம். சத்தீஸ்கர் காவல்துறையினர் நக்சல்களுக்கு எதிராக பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர். கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 287 நக்சல்கள் கொல்லப்பட்டு, சுமார் 1000 நக்சல்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 837 நக்சல்கள் சரணடைந்துள்ளனர்" என்று தெரிவித்தார்.

மேலும், "நாட்டிலுள்ள அனைத்து காவல் படைகளிலும் சத்தீஸ்கர் காவல் படை துணிச்சலானது என்று என்னால் உறுதியாக சொல்ல முடியும். சத்தீஸ்கர் உருவாகி 25வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் நிலையில், குடியரசுத் தலைவரின் வண்ண விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறீர்கள். இது உங்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, துணிச்சல் மற்றும் மக்கள் மீதான உங்களின் அன்பிற்கான சான்றாகும்" என்று பேசினார். இந்த பயணம் மூலம் அரசின் பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகளை எதிர்கொண்டு, சத்தீஸ்கரின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

# மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைச்சரவை விரிவாக்கம்

**மும்பை, டிச. 16-**

மகாராஷ்டிரத்தில் மகாயுதி கூட்டணியின் அமைச்சர்கள் நேற்று (டிச. 15) பொறுப்பேற்றுக்கொண்டனர். மகாராஷ்டிரத்தில் மகாயுதி கூட்டணியின் அமைச்சரவை விரிவாக்கம் நேற்று (டிச. 15) நடைபெற்றது. இதில் கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

நாக்பூரில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ், சிவசேனைக் கட்சியின் (ஷிண்டே பிரிவு) ஏக்நாத் ஷிண்டே, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் (அஜீத் பிரிவு) தலைவர் அஜீத் பவார் உள்ளிட்ட மகாயுதி கூட்டணி தலைவர்கள் கலந்துகொண்டனர். மேலும், மத்திய சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரியும் பங்கேற்றார்.

இதில், மகாயுதி கூட்டணியைச் சேர்ந்த அமைச்சர்கள் சஞ்சய் ரத்தோட், உதய் சமந்த், ஜெயக்குமார் ராவல், சந்திரகாந்த் பாட்டீல், அசோக் உய்க், ராதாகிருஷ்ணா விகே பாட்டீல், குலாப்ராவ் பாட்டீல், கணேஷ் ராமச்சந்திர நாயக் உள்ளிட்டோர் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக்கொண்டனர். மேலும், அதுல் சவே, தாதாஜி புசே, பவன்குலே, பங்கஜா முண்டே, தனஞ்செய் முண்டே, மங்கல் பிரபாத் லோதா ஆகியோரும் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

மகாயுதி கூட்டணி சட்டப்பேரவையில் பாஜகவுக்கு 19 அமைச்சரவையும், அஜீத் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸுக்கு 11, ஷிண்டே தலைமையிலான சிவசேனைக்கு 9 இடங்களும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 5ஆம் தேதி மகாராஷ்டிரத்தின் முதல்வராஜ தேவேந்திர ஃபட்னவீஸ் பதவியேற்ற நிலையில், 10 நாள்கள் கழித்து அமைச்சரவை உறுப்பினர்கள் பதவியேற்றுக்கொண்டனர்.

# பத்திரிகையாளரை சந்தித்து மன்னிப்பு கேட்ட தெலுங்கு நடிகர் மோகன்பாபு

**ஐதராபாத், டிச. 16-**

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பத்திரிகையாளரை தெலுங்கு நடிகர் மோகன் பாபு ஞாயிற்றுக்கிழமை சந்தித்து மன்னிப்பு கேட்டார்.

அப்போது இந்த சம்பவம் துரதிர்ஷ்டவசமானது என்று அவர் கூறியுள்ளார். மேலும் இந்த சந்திப்பின்போது மோகன் பாபுவின் மூத்த மகன் மஞ்சு விஷ்ணு உடனிருந்தார். இதுகுறித்து பத்திரிகையாளர் ரஞ்சித் குமார் கூறுகையில், அவர் (மோகன் பாபு) என்னிடமும், எனது குடும்பத்தினரிடமும் மற்றும் ஒட்டுமொத்த பத்திரிகையாளர் சகோதரர்களிடமும் மன்னிப்பு கேட்டார்.

குணமடைந்து மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆனவுடன் தனது வீட்டிற்கு வருவதாகவும் நடிகர் மோகன் பாபு கூறினார். இவ்வாறு அவர் குறிப்பிட்டார். தெலுங்கு நடிகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மோகன் பாபு தனது இளைய மகன் மனோஜ் மஞ்சு மீது ரச்சகொண்டா காவல் நிலையத்தில் அண்மையில் புகார் அளித்தார்.

இரண்டாவது மகன் மஞ்சு மனோஜ் தனது வீட்டில் அத்துமீறி நுழைந்து ஊழியர்களை மிரட்டியதாக தெரிவித்திருந்தார். ஆனால் அதை மறுத்த மஞ்சு மனோஜ், பதிலுக்கு அவரும் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதைத்தொடர்ந்து மோகன் பாபுவின் வீட்டுக்கு காவல்துறையினர் பாதுகாப்பு அளித்து, சிசிடிவி கேமிரா காட்சிகளை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், மோகன் பாபுவின் மூத்த மகன் மஞ்சு விஷ்ணு வெளிநாட்டில் இருந்து ஹைதராபாத்துக்கு விரைந்தார். இதனிடையே இதுகுறித்து செய்தி சேகரிக்க சென்ற பத்திரிகையாளரை மோகன் பாபு தாக்கியதாக புகார் எழுந்தது. இதையடுத்து அவர் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# நெல்லை காரையார் அணை நீர்மட்டம் திடீர் அதிகரிப்பு

**நெல்லை, டிச. 16-**

நெல்லை காரையார் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 12 அடி உயர்ந்தது.

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த 3 நாட்களாக கனமழை பெய்தது. இதனால் அணைகளுக்கான நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளது. அந்த வகையில் 143 அடி உயரம் கொண்ட காரையார் அணையின் நீர்மட்டம், நேற்று காலை நிலவரப்படி ஒரே நாளில் சுமார் 12 அடி உயர்ந்து 96.8 அடியை எட்டியுள்ளது.

அணைக்கான நீர்வரத்து 3,983 கன அடியாக உள்ளது. இதேபோல், 118 அடி உயரம் கொண்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 96.84 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கான நீர்வரத்து 4,913 கன அடியாக உள்ளது. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பரவலான மழை பெய்து வருவதால், இரு அணைகளின் நீர்மட்டமும் விரைவில் 100 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து ஆதவ் அர்ஜுனா விலகல்

**சென்னை, டிச. 16-**

விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து ஆதவ் அர்ஜுனா விலகியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து விலகுவதாக ஆதவ் அர்ஜுனா அறிவித்துள்ளார். இது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்னதாக, சென்னை நந்தனத்தில் கடந்த 6ம் தேதி அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது. இந்த விழாவில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் உள்பட பலர் கலந்துகொண்டனர். இந்த விழாவில் கலந்துகொண்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, திமுக குறித்து பேசிய கருத்துகள் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனிடையே, கட்சி நலன்களை பாதிக்கும் வகையில் செயல்பட்டதால் விடுதலை சிறுத்தைகள் துணைப் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா கட்சியில் இருந்து 6 மாதங்களுக்கு சஸ்பெண்டு செய்யப்படுவதாக அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் கடந்த 9ம் தேதி அறிவித்தார். இந்நிலையில், விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து விலகுவதாக ஆதவ் அர்ஜுனா இன்று அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் ஆதவ் அர்ஜுனா வெளியிட்டுள்ள பதிவில்,

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய வியூக வகுப்பாளராக பணியாற்றத் தொடங்கி, கட்சியின் அடிப்படை உறுப்பினராக இணைந்தேன். தங்களுடைய சீரிய எண்ணத்தின்பால் எனக்குத் துணைப் பொதுச் செயலாளர் பதவி கொடுத்தீர்கள். அந்த பொறுப்புகளோடு கடந்த இரண்டு ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் கட்சி பணியாற்றினேன். சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் சாதிய கட்டமைப்புகள், அதன் அடித்தளம், தொடர்ந்து நீளும் அதன் அதிகாரக் கரங்கள், பாதிக்கப்படும் மக்களின் துயர்கள் ஆகியவற்றை நான் ஆற்றிய களப் பணிகளில் உணர்ந்தேன். அதற்கு எதிரான செயற்திட்டங்களைக் கொள்கை ரீதியாக வகுத்து என்னைச் செயற்பட வைத்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

இனி வருங்காலங்களில், புரட்சியாளர் அம்பேத்கர் கூறியதை போல "அதிகாரத்தை நோக்கி கேள்வி எழுப்புங்கள்" என்கிற அடிப்பையில் 'சாதி ஒழிப்பு, சமூக நீதி, எளிய மக்களுக்கான அரசியல் உரிமைகள் என்ற நிலைப்பாட்டோடு மதப் பெரும்பான்மைவாதம், பெண்ணடிமைத்தனம், மக்களை வஞ்சிக்கும் ஊழல் ஆகியவற்றை ஒழிக்கும்' அரசியல் போராட்டங்களில் தங்களுடன் தொடர்ந்து பயணிக்கவே விரும்புகிறேன். எனவே, என்னைப் பற்றிய தேவையற்ற விவாதங்கள் பொதுவெளியில் தொடராமல் இருக்க வேண்டும் என்ற நோக்கில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியிலிருந்து முழுமையாக என்னை விடுவித்துக்கொள்வது என்று முடிவெடுத்துள்ளேன்.

அரசியல் களத்தில் என்னைப் பயணப்பட வைத்து, நேரடியாகக் களமாடச் செய்த தங்களுக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தோழர்களுக்கும் எனது நன்றியையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறேன். கட்சியிலிருந்து வெளியேறும் இந்த கனமான முடிவை கனத்த இதயத்துடன் காலத்தின் சூழ்நிலைக் கருதியே எடுத்துள்ளேன். இனி வரும் காலங்களில் உங்கள் வாழ்த்துகளுடன், மக்களுக்கான ஜனநாயகம், சமத்துவம், சமநீதி என்ற அடிப்படையில் எனது அரசியல் பயணம் தொடரும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இ.வி.எம். மீது நம்பிக்கை இல்லாவிட்டால்...

# காங்கிரஸ் மீது உமர் அப்துல்லா குற்றச்சாட்டு

**ஸ்ரீநகர், டிச. 16-**

வாக்கு இயந்திரங்கள் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று காங்கிரஸ் கட்சி மீது உமர் அப்துல்லா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் நடந்த ஜம்மு-காஷ்மீர் சட்டசபை தேர்தலில், மொத்தமுள்ள 90 இடங்களில் தேசிய மாநாடு கட்சி 42 இடங்களில் வெற்றி பெற்றது. அதனுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட காங்கிரஸ் 6 இடங்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 1 இடம் என மொத்தம் 49 இடங்களை இந்த கூட்டணி கைப்பற்றியது. மேலும் சுயேச்சை எம்.எல்.ஏ.க்கள் 4 பேர் தேசிய மாநாடு கட்சிக்கு ஆதரவு கொடுத்த நிலையில், அக்கட்சியின் துணை தலைவர் உமர் அப்துல்லா, ஜம்மு-காஷ்மீரின் முதல்-மந்திரியாக பதவியேற்றார். இதற்கிடையில் காங்கிரஸ் மீது தேசிய மாநாடு கட்சி அதிருப்தியில் இருப்பதாக தகவல்கள் வெளியாகின. குறிப்பாக சட்டசபை தேர்தலின்போது காங்கிரஸ் தரப்பில் இருந்து போதிய அளவில் பிரசார பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என தேசிய மாநாடு கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த நிலையில், மின்னணு வாக்கு இயந்திரங்கள் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியை விமர்சிக்கும் வகையில் ஜம்மு-காஷ்மீர் முதல் மந்திரி உமர் அப்துல்லா வெளிப்படையான கருத்துகளை முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில், "மின்னணு வாக்கு இயந்திரங்கள் மீது சந்தேகம் இருந்தால், அந்த சந்தேகம் நிலையானதாக இருக்க வேண்டும். நாடாளுமன்ற தேர்தலில் இதே மின்னணு வாக்கு இயந்திரங்கள் மூலம் எதிர்க்கட்சிக்கு நூற்றுக்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கிடைத்த போது அதை கொண்டாடிவிட்டு, சில மாதங்களுக்கு பிறகு நடந்த சட்டமன்ற தேர்தல்களில் எதிர்பார்த்த முடிவு வராவிட்டால் வாக்கு இயந்திரங்களை குறை சொல்வது சரியா? அரசியல் கட்சிகளுக்கு மின்னணு வாக்கு இயந்திரங்கள் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் தேர்தலில் போட்டியிடக் கூடாது. ஒரு நாள் வாக்காளர்கள் உங்களை தேர்ந்தெடுப்பார்கள், அடுத்த நாள் தேர்ந்தெடுக்கமாட்டார்கள். எங்கள் கட்சி மக்களவை தேர்தலில் தோல்வியை சந்தித்தாலும், சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளது. நான் ஒருபோதும் வாக்கு இயந்திரத்தை குறை சொன்னது இல்லை" என்று தெரிவித்தார்.

சமீபத்தில் மராட்டிய மாநிலம் மற்றும் அரியானா சட்டமன்ற தேர்தல்களில் ஏற்பட்ட தோல்விக்கு பிறகு காங்கிரஸ் கட்சி தலைவர்கள் மின்னணு வாக்கு இயந்திரத்தின் நம்பகத்தன்மை குறித்து பல்வேறு கேள்விகளை முன்வைத்தனர். வாக்குச் சீட்டு முறையை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்த சூழலில், காங்கிரஸ் கட்சியை விமர்சிக்கும் வகையில் உமர் அப்துல்லா பேசியுள்ளது கவனம் பெற்றுள்ளது.

# உ.பி.யை அரசியல் பரிசோதனை கூடமாக இயக்குகிறது பா.ஜ.க.

## கி.வீரமணி குற்றச்சாட்டு

**கும்பகோணம், டிச. 16-**

உத்தரப் பிரதேச மாநிலத்தை பாஜகவினர் அரசியல் பரிசோதனை கூடமாக இயக்கி வருகிறார்கள் என்று திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்த திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி செய்தியாளர்களிடம் கூறியது: கேரளா மாநிலம் வைக்கத்தில், தமிழக - கேரளா முதல்வர்கள் பெரியாருக்கு வரலாற்றில் காணமுடியாத அற்புதமான நூலகம், காட்சியகம், கண்காட்சி உள்ளிட்டவைகளை அமைத்துள்ளனர். அதன் வெற்றி என்பது ஒரு பகுதி தான். மற்றொரு வெற்றி காவியையும், தீண்டாமையையும் வேரோடும், வேரடி மண்ணோடும் அழிப்பது தான்.

வரும் டிச.24-ம் தேதி பெரியார் நினைவு தினத்தன்று ஒரு வாரத்திற்குத் தமிழகம் முழுவதும் தோழமை கட்சிகளை அழைத்து, சாதி, தீண்டாமை ஒழிப்பு வலியுறுத்தும் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன. இதில் ஒத்த கருத்துள்ளவர்கள் அனைவரும் ஓரணியிலேயே இணைந்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளனர். எந்த அரசும் செய்யாத சாதனைகளை திராவிட மாடல் அரசு செய்திருக்கின்றது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல, திராவிட கழகம் முன் நிற்கும். தேவைப்பட்டால் போராட்டக்களமாக மாறும்.

பாஜக அரசியல் சட்டக் காவலர்கள் என்று சொல்லிக் கொண்டு, அதன் முகப்புரையை அழிக்கிறார்கள் என்பதற்கு அடையாளம் தான் ஒரே நாடு ஒரே தேர்தலாகும். அனைத்திலும் ஒன்று தான் என்று கூறும் பாஜக அரசு, அனைவரும் ஒரே சாதி என்று சொல்வதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறது. முதலில் மக்களை ஒரு நிலைப்படுத்த வேண்டும். உச்ச நீதிமன்ற தீர்ப்பில், அடிக்கட்டுமானத்தை எந்த சட்டத்திட்டமும் மாற்ற முடியாது என மிகத்தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இறையாண்மை என்பது மக்கள் மத்தியில் தான் உள்ளது. ஒரே நாடு ஒரே தேர்தல் சட்டம் கொண்டு வந்தால் பொருளாதாரம் மிச்சப்படும் என்று கூறுகிறார்கள். இந்த சட்டம் இயற்றினால் இனி மேல் தேர்தலே வராது. இது பாசிசத்துடைய முகபுலாம் அணிந்த ஒன்று. இந்த சட்டம் ஜனநாயகத்திற்கு விரோதமானது, சர்வாதிகாரமாகும்.

பாஜக அரசு முழு மெஜாரிட்டி அரசு இல்லை, மைனாரிட்டி கூட்டணி அரசு தான். 2 கட்சி தயவினால் இந்த ஆட்சி நடைபெறுகிறது. மனு தர்ம ஆட்சியை மீண்டும் கொண்டு வருவதற்காக தான், இந்த திட்டத்தைச் செயல்படுத்த உள்ளார்கள். இது வன்மையாக கண்டிக்கக்கூடியதாகும்.

கருணாநிதி நெஞ்சுக்கு நீதியில் ஒரே நாடு ஒரே தேர்தல் பற்றி எழுதியது, அந்த நேரத்திற்கு அவருக்குத் தேவைப்பட்ட கருத்தைக் கேட்டிருப்பார்கள், அதைப் பற்றிக் கூறியிருப்பார். இதில் அவர் கூறியது முரண்பாடு இல்லை.

உத்திரபிரதேசம் மாநிலத்தை பாஜக அரசியல் பரிசோதனை கூடமாக இயக்கி வருகிறார்கள். அங்கு மனு தர்மப்படி ஆட்சி நடைபெறுகிறது. இப்போது அவர்களது பலமே, எதிர்க்கட்சியின் பலவீனம் தான். வென்றாலும், தோற்றாலும் நாங்கள் தான் ஆட்சி என்ற புதிய தத்துவத்தைச் செய்திருக்கிறது பாஜக அரசு. இவ்வாறு வீரமணி தெரிவித்தார்.

நடிகர் விஜய் கட்சி தொடங்கியது குறித்துக் கேட்ட போது, "வானவில் அடிக்கடி தோன்றும், சூரியன் எப்போதும் நிரந்தரமாக இருக்கும்" எனத் தெரிவித்தார்.

மரம் மனிதனின் உரம்

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 16.12.2024 முதல் 22.12.2024 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தி குறையும் வாய்ப்பு ஏற்படலாம். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. ஆசிரியர்களின் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். தொலைதூர செய்திகள் நன்மை அளிப்பதாகவும், மன மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருக்கும்.

பரணி --

இந்த வாரம் வீட்டுக்கு விஜயம் செய்யும் விருந்தினரோடு மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பீர்கள். எல்லா வகையிலும் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். பெண்களால் இலாபம் ஏற்படும். தாயார் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளுவார். தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்படும். பொதுவாகப் பயணத்தின் போது பொருட்கள் தொலைந்து போகாது இருக்க மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சிலருக்கு எந்த ஒரு காரியமும் மந்த கதியிலேயே தாமதமாக நடக்கும். மனதில் கடன், செலவு என பணம் பற்றிய சிந்தனைகளே அதிகம் ஓடிக்கொண்டு இருக்கும். வியாபாரத்தில் ஈடுபட்டு உள்ளவர்களுக்குப் போதுமான அளவு தனவரவு இருக்கும்.

கார்த்திகை *1* ஆம் பாதம்.—

இந்த வாரம் புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். தேவையற்ற கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தாய்வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படலாம். நல்லவர்களின் தொடர்பு சஞ்சலங்கள் தீர வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, அதிக இலாபம் பெற முயல்வீர்கள். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. கீழே விழுதல், காயம் படுதல் போன்ற சிறு விபத்துக்கள் ஏற்படும். மற்றபடி, சுகாதார மற்ற இடங்களில் உணவு உண்பதை தவிர்ப்பது நல்லது.

## ரிஷபம்

(கார்த்திகை – *2,3,4* பாதங்கள்-ரோகிணி-*1,2,3,4*-பாதங்கள்-மிருகசிரீடம்-*1,2* பாதங்கள் )

கார்த்திகை *2,3,4* பாதங்கள் –

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி பொங்கும் தருணங்களால் புதிய உறவுகள் ஏற்படும். நண்பர்களுடன் வெளி வட்டாரங்களில் சுற்றுவதால் செலவுகளை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகளில் கவனம் செலுத்தினால் தனவரவு அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு பொருள்களின் இருப்புக் கூடுவதால் வியாபாரம் அதிகரிக்கும். பக்தி சொற்பொழிவுகளைக் கேட்பதால் ஞானம் பெருகும். இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் இருக்கும்.

ரோகிணி –

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் மனம் ஈடுபடும். எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பண உதவிகள் கிடைக்கும். வாலிப நெஞ்சங்கள் விருந்து, சினிமா என மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பர். வாக்குவன்மையால் பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும். பிரயாணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். வியாபாரிகளுக்கு கடன் கொடுத்தவர்கள் தொல்லை தரலாம். சிலருக்குக் குடும்பத்தில் அனாவசிய செலவுகள் ஏற்படும். பிறரிடம் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. புதிய தொழில் விரிவாக்க முயற்சிகளால், பொருளாதார நிலை உயர்ந்து தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

மிருகசீரிஷம் – *1 , 2* பாதங்கள் –

இந்த வாரம் தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். பள்ளிக் கல்வியில் வெற்றி பெற்று சந்தோஷத்தில் மிதப்பீர்கள். தொலைதூரப் பயணங்களால் நன்மையும் மன மகிழ்ச்சியும் ஏற்படும். வீட்டில் பெரியவர்கள் ஆசியுடன் சுபகாரியங்கள் விமரிசையாக நடக்கும். ஆடை ஆபரண சேர்க்கையால் ஆனந்தம் பெருகும். சகோதரரிடம் அன்பாய் இருங்கள். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது மேன்மை தரும்... சிலருக்கு சுறுசுறுப்பற்ற நிலை காரணமாகக் காரியத் தடைகள் ஏற்படலாம். வீண் அலைச்சல்கள் ஏற்பட்டு, செலவும் அதிகரிக்கும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- *3,4* பாதங்கள், திருவா திரை-*1,2,3,4* பாதங்கள், புனர்பூசம் -*1,2,3* பாதங்கள்)

மிருகசீரிஷம் – *3 , 4* பாதங்கள். –

இந்த வாரம் தாயின் அன்பும், அரவணைப்பும் கவலைகளை மறக்கச் செய்யும். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு உண்ணவும் நேரம் இருக்காது. பெண்கள் அதிகாலையில் எழுந்து பூஜா காரியங்களில் ஈடுபட்டு மன மகிழ்ச்சி அடைந்து, நிம்மதியும் பெறுவர். அரசு வகை வரிப் பாக்கிகள் செலுத்துவதற்கு தேவையான பணவுதவி கள் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும். வாக்கு வன்மையால் மேடைப் பேச்சாளர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். போட்டி, பந்தயங்களில் வெற்றி அடைவர்.

திருவாதிரை ---

இந்த வாரம் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். புத்தகப் பதிப்பாளர் களுக்கு தொழிலில் ஏற்றம் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் அனுகூலங்கள் வந்து சேரும். எவ்விதக் குறைகளும் இருக்காது. சிலருக்கு உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

புனர்பூசம் – *1, 2, 3* – பாதங்கள்.

இந்த வாரம் நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் கண்டிப்பாக இருக்கும். பிறந்த நாள் விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். தொலைதூர நல்ல செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். புதிய நண்பர்களால் அதிக நன்மைகள் ஏற்படும். இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். மாணவர்கள் ஆசிரியர்கள் ஆலோசனைப்படி மேற்படிப்புக்கான புதிய முயற்சிகளில் ஈடுபடும்.

## கடகம்

(புனர்பூசம்- *4* ஆம் பாதம், பூசம்-*1,2,3,4* பாதங்கள், ஆயில்யம்-*1,2,3,4* பாதங்கள்)

புனர்பூசம் – *4* ஆம் பாதம்.

இந்த வாரம் புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மிக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். வீட்டில் பிடிவாதங்களை தளர்த்தினால் பிணக்குகள் தீரும். இடம் சம்பந்தமான வழக்குகள் வெற்றி பெற்று, புதிய சொத்துக்கள் சேரும். அரசு வகையில் அதிக அளவு சகாயங்களை பெறுவீர்கள். புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் பணத்தைச் சேமிக்க முற்படுவீர்கள்.

பூசம் --

இந்த வாரம் தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். மேலதிகாரிகளின் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய கொள்முதல் மூலமாகத் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். பெண்கள் உயர் அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தான தருமங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச்செய்திகள் எதிர்பார்க்கலாம். முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்படும்.

ஆயில்யம் –

இந்த வாரம் வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படாதிருக்க ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வீடு கட்டுவதற்கு வங்கிக் கடன்கள் சுலபமாக கிடைக்கும். உறவினர் மூலமாகவும் பண உதவிகள் கிடைக்கும். தொழிலில் புதிய நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத விதமாக இடமாற்றங்கள் ஏற்படலாம். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். மாணவர்கள் கல்லூரியில் சேருவதற்கு ஏற்பாடுகளைப் பெற்றோரோடு செய்வார். வேலைக்கு அலைபவர்களுக்கு வேலை கிடைக்கும்.

## சிம்மம்

(மகம்-*1,2,3,4* பாதங்கள்,பூரம்- *1,2,3,4* பாதங்கள் மற்றும் உத்திரம்- *1* பாதம்)

மகம் –

நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். சிலருக்குப் பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தந்தை வழி உறவுகள் உதவி இருக்காது. சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள்.

பூரம் –

இந்த வாரம் இந்த வாரம் சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். விருந்தினர் வருகையால் மனதில் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் துய்ப்பீர்கள். சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் ஏற்படும். மேலதிகாரிகளால் அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். அரசாங்க விருதுகள் கிடைக்கும் வாய்ப்பு உருவாகும். வாக்குவன்மை ஓங்கும். வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பயிர், மனை இவற்றால் இலாபம் இராது. உங்களுக்குப் பயணத்தின் மூலம் ஆதாயங்கள் ஏற்படும்.

உத்திரம்- *1* பாதம் –

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் ஏற்படும். அரசு வழியில் எதிர்பார்க்கும் சகாயங்கள் அனைத்து ம் தாமதம் இன்றிக் கிடைக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் வாடிக்கையாளரை கவர்வர். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

## கன்னி

( உத்திரம் – *2, 3, 4*-பாதங்கள், ஹஸ்தம்-*1, 2, 3, 4* பாதங்கள், சித்திரை – *1,2* பாதங்கள்)

உத்திரம் – *2, 3, 4* – பாதங்கள்.

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் ஈடேறும். கவலை வேண்டாம். போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் இலாபம் ஏற்படும். பொது இடங்களில் தீயவர்களை கண்டு விலகிச் செல்வது சிக்கல்களில் இருந்து விடுபட உதவும். குழந்தைகளிடம் அன்பாக பழகுவது சிறப்பு.. சிலருக்குக் குழந்தைகள் மூலமாகத் தொல்லைகள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும்.

அஸ்தம் –

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதால் இன்பம் நிலைத்திருக்கும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடிவரும். காவல்துறையில் பணிபுரிபவர்களுக்கு அவர்களின் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப் படுவதோடு தீரச் செயல்களுக்கான விருது கிடைக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சுபச்செலவு காரணமாக சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணம் கரையும்.

சித்திரை – *1,2* பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்குப் பயணத்தின் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். அரசு வழியில் எதிர்பார்க்கும் சகாயங்கள் அனைத்தும் தாமதம் இன்றிக் கிடைக்கும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் புதிய இடத்திற்குப் பணி மாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். உடன் பிறந்தவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும்.

## துலாம்

( சித்திரை-*3,4* பாதங்கள், சுவாதி – *1,2,3,4* பாதங்கள் மற்றும்விசாகம்-*1,2,3* பாதங்கள்)

சித்திரை-*3,4* பாதங்கள் –

இந்த வாரம் வாக்கால் வருமானம் பெருகும். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் ஏற்படும். எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெறும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். தனவரவு எதிர்பார்த்ததை விட அதிகமாக இருக்கும். பேச்சாளர்களுக்கு, புத்தக வெளியீட்டாளர் களுக்கும் தொழிலில் வெற்றியும், பாராட்டுகளும் கிடைக்கும். அரசு உதவியுடன் விரிவாக்கத் திட்டங்கள் தங்கு தடையின்றி நிறைவேற்றி முன்னேற்றம் காண்பர். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் மூலம் பணமும், புகழும் கிடைக்கும்.

சுவாதி –

இந்த வாரம் பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். தொய்வின்றி தங்கள் பணிகளை கடமையுணர்வுடன் நிறைவேற்றும் அரசுப் பணியாளர்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவு நிச்சயம் இருக்கும். குடும்பத்தினரிடையே வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும்.

விசாகம்- *1,2,3* பாதங்கள் –

இந்த வாரம் புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். வித்தைகளில் தேர்ச்சியும் அறிவுத்திறனும் கூடும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால்தான் அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும். உழைப்பு அதிகமாகி களைப்பும், சோர்வும் ஏற்படும். சகோதர முன்னேற்றம், காரிய சித்தி, தலைமைப் பதவி ஆகியவை ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு சாதகமான நிலை உருவாகி பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

## விருச்சிகம்

(விசாகம்- *4*, அனுஷம்-*1,2,3,4* பாதங்கள் மற்றும் கேட்டை -*1,2,3,4* பாதங்கள் )

விசாகம்- *4* ஆம் பாதம் –

இந்த வாரம் பெண்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். பெரும் புள்ளிகளின் அறிமுகத்தால் நன்மைகள் ஏற்படும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். அரசியலில் சிலருக்கு மாவட்ட பொறுப்புகள் தேடி வரும். உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் எளிதில் பணி உயர்வு கிடைக்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். தேவையற்ற ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்கள் கடன் வாங்கும் நிலையைத் தவிர்க்கலாம். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பும் உங்களுக்குத் தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும்.

அனுஷம் –

இந்த வாரம் வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும் போது நெருங்கிய உறவுகளின் ஒத்துழைப்பால் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அமையும். அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. புதிய வியாபார தொடர்புகள் வருமானம் பெருக, வாழ்க்கையும் வளமாகும். மகான்களின் தரிசனம் கிடைக்கும். உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். உயர் அதிகாரிகளிடம் சுமூகமாக நடந்து கொள்வது முன்னேற்றத்தைத் தரும்.

கேட்டை –

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்திகள் குறையும் வாய்ப்பு ஏற்படலாம். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும்.

## தனுசு

( மூலம்-*1,2,3,4* பாதங்கள், பூராடம்- *1,2,3,4* பாதங்கள் மற்றும் உத்திராடம் –*1* பாதம்)

மூலம் –

இந்த வாரம் பல வழிகளில் வருமானம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் மன அமைதி கிடைக்கும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம். தந்தை வழி உறவினர்களால் பிரச்சனைகள் ஏற்படலாம். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும். முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும்.

பூராடம் –

இந்த வாரம் மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனுச் செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரும். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த அளவுக்கு மேல் உயர்வுகள் இருக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும்.

உத்திராடம் –*1* ஆம் பாதம் –

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும்.

சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். ஆயினும், எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது.

## மகரம்

( உத்திராடம்- *2,3,4*-பாதங்கள், திருவோ ணம்-*1,2,3,4* மற்றும் அவிட்டம் *1,2* பாதங்கள் )

உத்திராடம்- *2,3,4*- பாதங்கள் ---

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள்.தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும்.

திருவோணம்-

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு அதிகாரிகள் தயவால் தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். பெரியவர்கள் ஆசியால் உங்கள் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். கடின உழைப்பினால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும்.

அவிட்டம் *1,2* பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு அனைத்து சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். கூட்டாளிகளின் நியாயமற்ற செயல்பாடுகள் எரிச்சலைத் தரும்.

## கும்பம்

(அவிட்டம் – *3,4* பாதங்கள்– சதயம்-*1,2,3,4* பாதங்கள்-பூரட்டாதி-*1,2,3* பாதங்கள்)

அவிட்டம் – *3,4* பாதங்கள்—

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தொழிலில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். கல்வியைப் பொறுத்தவரை பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.

சதயம்-

இந்த வாரம் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். வீண் செலவுகளை குறைத்து எதிர்காலத்துக்கு சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு நீர் இன்மையால் ஆதாயம் வெகுவாகக் குறையும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர்.

பூரட்டாதி-*1,2,3* பாதங்கள் –

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள்.

## மீனம்

( பூரட்டாதி – *4* ஆம் பாதம், உத்திரட்டாதி-*1,2.3.4* பாதங்கள் , ரேவதி- *1,2,3,4* பாதங்கள்)

பூரட்டாதி – *4* ஆம் பாதம் –

இந்த வாரம் தங்கள் மனதிற்குப் பிடித்த படி அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்தும் உயரும். பால்வளம் பெருகுவதால் ஆதாயம் பெருகும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே நடத்தி முடிப்பீர்கள். கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். தேவையற்ற பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் உறவினர் இல்ல விழாக்களில் கலந்து கொண்டு களிப்படைவீர்கள். திருமணமாகாத பெண்களு க்குத் திருமணத்துக்கான முயற்சிகள் நடந்து முடியும். அதிகப்படியான வருமானங்கள் கிடைக்கும். உடல் உபாதைகள் காரணமாகத் தொழிலில் உற்பத்தி பாதிப்புகள் ஏற்படலாம். ஆயினும், எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் முழுமையான ஒத்துழைப்பு மூலம் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். மனங்கவர்ந்த அன்புமிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். கடையில், நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி, வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். அரசுப் பணியாளர்கள் அதிகாரிகள் பாராட்டுதல்களை பெறுவீர்கள்.

ரேவதி-

இந்த வாரம் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள். மற்றவர்களுக்கு நல்லது செய்வதன் காரணமாக உங்கள் கீர்த்தி பெருகும். பழைய புதிய முதலீடுகளால் தொழிலில் ஏற்றம் காணலாம். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி புதிய வேகம் பிறக்கும். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சிலருக்கு சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும்.

மதிப்பு, கௌரவம் உயரும்.



● மறைந்த காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனின் உடலுக்கு நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று 2-வது முறையாக நேரில் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினார்.



● அ.தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் நேற்று சென்னையை அடுத்த வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு திருமண மண்டபத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அ.தி.மு.க. அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் மற்றும் கட்சியின் முன்னணி நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழர்களின் நலன்களை காக்க தி.மு.க. ஆட்சியில் இருக்க வேண்டும்

## அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு

சிவகாசி, டிச. 16-

தமிழர்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்றால் திமுக ஆட்சியில் இருக்க வேண்டும், என சமூக வலைதள பயிற்சி முகாமில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.

சிவகாசியில் திமுக சார்பில் எக்காலமும் நம் களமே என்ற தலைப்பில் 2026 சட்டமன்ற தேர்தல் ஒருங்கிணைப்பு பணிகள் குறித்த இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான சமூக வலைதள பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேசுகையில்: களத்தில் நாம் அசகாய சூரர்களாக இருக்கலாம், ஆனால் நேற்று ஆரம்பித்து இருக்கக்கூடிய கட்சிகள் கூட, தமிழகத்தில் தங்களுக்கு மிகப்பெரிய செல்வாக்கு இருப்பதாக ஒரு மாயையை உருவாக்கி விட முடிகிறது. அதற்கு காரணம் அனைத்து தரப்பிலும் இருக்கக்கூடிய தன்னார்வலர்களை, ஆதரவாளர்களை களத்தில் ஒன்றுபடுத்தி விடுகிறார்கள்.

அந்த ஒன்றுபடுத்தும் பணியை நாம் செய்தால் களத்தில் நமக்கு இருக்கக்கூடிய சக்தியும், நமது அனுபவமும் சேர்ந்து 2026 தேர்தலில் முதல்வர் நிர்ணயித்து உள்ள 200 தொகுதிகளையும் தாண்டி நாம் வெற்றி பெற முடியும். நம்முடைய தலைவர்கள் மற்றும் சித்தாந்தங்களை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். தகவல் தொழில் நுட்ப புரட்சிக்கு பின் சமூக வலைதளங்கள் மூலம் ஒரு நொடி பொழுதில் லட்சக்கணக்கானோரை சென்று சேரக்கூடிய வாய்ப்பை பெற்றுள்ளோம்.

நமது கட்சியின் பெயருக்கும், தலைவர்களின் புகழுக்கும் ஊரு விளைவிக்காத வகையில் பணியாற்ற வேண்டும். கண் இமைக்கக்கூடிய நேரத்திற்குள் 2026 தேர்தல் வந்துவிடும். முதல்வர், துணை முதல்வரின் திட்டங்கள், அறிக்கைகளை சமுதாயத்தில் அனைத்து அடுக்குகளில் உள்ள மக்களுக்கும் எடுத்து சொல்ல வேண்டும். திமுகவின் கொள்கைகள், அரசு திட்டங்கள் மற்றும் பணிகளை அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும்.

தமிழ் மொழியின் பண்பாடு, கலாச்சாரத்தை காப்பாற்றி அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாம் பயணிக்க வேண்டும். இந்த பணி நாம் அதிகாரத்திற்கு வரவேண்டும் என்பதற்காக அல்ல, தமிழர்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்றால் திமுக ஆட்சியில் இருக்க வேண்டும். திமுக ஆட்சியில் தொடர வேண்டியது காலத்தின் அவசியம், இவ்வாறு அவர் பேசினார். இதில் மேயர் சங்கீதா, தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மதுரை பாலா, மாநகர திமுக செயலாளர் உதயசூரியன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தொண்டர்களே அ.தி.மு.க.வின் பலம்:

# பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பரபரப்பு பேச்சு

சென்னை, டிச. 16-

தொண்டர்களே அ.தி.மு.க.வின் பலம் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

அ.தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் சென்னையை அடுத்த வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் கட்சியின் முன்னணி நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் மொத்தம் 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதைத்தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:-

கூட்டணி வரும் போகும் ஆனால் கொள்கை என்பது நிலையானது. தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு வென்ற கட்சி அ.தி.மு.க. பாராளுமன்ற தேர்தல் முடிந்த பின் பல விமர்சனங்கள் எழுந்தன.

எந்த கட்சிக்கும் இல்லாத தொண்டர் பலம் அ.தி.மு.க.விற்கு உள்ளது. உறுப்பினர்கள் அட்டைகளை வீடு வீடாக சென்று அளித்த ஒரே கட்சி அ.தி.மு.க. மட்டும் தான். பாராளுமன்ற தேர்தல் என்பது வேறு, சட்டசபை தேர்தல் என்பது வேறு. 2024 பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வின் வாக்கு சதவீதம் உண்மையில் சரிந்துள்ளது. 2014 தேர்தலை ஒப்பிடும் போது பா.ஜ.க. 1 சதவீதத்திற்கும் மேல் வாக்குகளை இழந்துள்ளது.

2021 தேர்தலில் அ.தி.மு.க. 34 இடங்களில் குறைந்த வாக்குகளில் தோற்றது. அ.தி.மு.க.விற்கு மக்கள் செல்வாக்கு இல்லை என்ற தோற்றத்தை உருவாக்க முயற்சி நடக்கிறது. யானைக்கு பலம் தும்பிக்கை. நமக்கு பலம் நம்பிக்கை என்று அவர் பேசினார்.

## டெல்லி சட்டசபை தேர்தல்:

# ஆம் ஆத்மி கட்சியின் 3-ம் கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு

புதுடெல்லி, டிச. 16-

டெல்லி சட்டசபை தேர்தலில் போட்டியிடும் ஆம் ஆத்மி கட்சியின் 3-வது கட்ட வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டு உள்ளது.

டெல்லி சட்டசபையின் தற்போதைய பதவிக்காலம் வருகிற பிப்ரவரி 23-ந் தேதி நிறைவடைகிறது. இதனால் தேர்தல் விரைவில் அறிவிக்கப்படும்.

இந்த நிலையில் ஆம் ஆத்மி கட்சி களத்தில் தீவிரமாக இறங்கி வேலை பார்க்கிறது.

தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பே அக்கட்சி தனது முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை கடந்த மாதம் 21-ந் தேதி அறிவித்தது. அதில் 11 பேர் இடம் பெற்று இருந்தனர்.

இதனையடுத்து மேலும் 20 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை கடந்த 9-ம் தேதி ஆம் ஆத்மி கட்சி அறிவித்தது. இதில் மணீஷ் சிசோடியா உள்பட 2 எம்.எல்.ஏ.க்கள் தொகுதி மாற்றம் செய்யப்பட்டு உள்ளனர். தற்போது அறிவிக்கப்பட்ட 20 தொகுதிகளில் 14 எம்.எல்.ஏ.க்களுக்கு சீட் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த 2-வது பட்டியலுடன் சேர்த்து இதுவரை 31 இடங்களுக்கு வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், டெல்லி சட்டசபை தேர்தலில் போட்டியிடும் 38 வேட்பாளர்கள் அடங்கிய 3-ம் கட்ட வேட்பாளர் பட்டியலை ஆம் ஆத்மி கட்சி நேற்று வெளியிட்டுள்ளது. புதுடெல்லி தொகுதியில் முன்னாள் முதல்-மந்திரி அரவிந்த் கெஜ்ரிவால் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல்-மந்திரி அதிஷி கல்காஜி தொகுதியிலும், சத்யேந்தர் ஜெயின் மற்றும் கோபால் ராய் ஆகியோர் ஷகுர் பஸ்தி மற்றும் பாபர்பூரில் போட்டியிடுகின்றனர்.




● புதுடெல்லியில் அம்பேத்கர் சர்வதேச மைய வளாகத்தில் நேற்று, மத்திய அமைச்சர் வீரேந்திரகுமார் தலைமையில், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம்-2016-ன் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனை வாரியத்தின் 7-வது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு, மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கு நிலையினை எடுத்துக்கூறி, கோரிக்கைகளை பரிசீலித்து அதற்கான நிதியை விரைவாக விடுக்க மத்திய அமைச்சரிடம் கடிதம் வழங்கினார்.

## குற்றாலம் மெயின் அருவியில்

# வெள்ளம் குறைந்ததால் சீரமைப்பு பணிகள் தீவிரம்

தென்காசி, டிச. 16-

குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளம் குறைந்ததால் சீரமைப்பு பணிகள் தீவிரம் அடைந்துள்ளது.

கடந்த 3 நாட்களாக பெய்த கனமழை காரணமாக குற்றாலம் மெயின் அருவியில் காட்டாற்று வெள்ளம் ஆக்ரோஷமாக சீரிப்பாய்ந்தது. அருவியின் மேற்பகுதியில் இருந்து பாறைகள், மரக்கிளைகள் உள்ளிட்டவை அடித்து வரப்பட்டன.

இதனால் மெயின் அருவி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைகள், தடுப்பு கம்பிகள் ஆகியவை சேதடமைந்தன.

இதனிடையே வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட ஒரு ஆண் யானையின் சடலம் அருவிக்கரையில் மீட்கப்பட்டது. இந்த நிலையில், குற்றாலம் மெயின் அருவியில் இன்றைய தினம் காட்டாற்று வெள்ளத்தின் வேகம் சற்று தணிந்துள்ளது. இதையடுத்து பேரூராட்சி ஊழியர்கள் குற்றால அருவியில் முகாமிட்டு சேதங்களை சரிசெய்யும் பணியை தொடங்கியுள்ளனர். அதே சமயம், குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகளை அனுமதிக்க மேலும் சில நாட்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# ஒரே நாடு, ஒரே தேர்தல் முறைக்கு இடதுசாரி கட்சிகள் கடும் எதிர்ப்பு

சென்னை, டிச. 16-

ஒரே நாடு ஒரே தேர்தல் முறைக்கு இடதுசாரி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சிகளின் மாநிலச் செயலாளர்கள் கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்), இரா.முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட்), பழ.ஆசைத்தம்பி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) ஆகியோர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை:

பாராளுமன்ற ஜனநாயகத்தை நட்டாற்றில் தள்ளும் வகையிலும் கூட்டாட்சித் தத்துவத்தை குழிதோண்டிப் புதைக்கும் வகையிலும் மாநில உரிமைகளை மண்மேடாக்கும் வகையிலும், "ஒரே நாடு; ஒரே தேர்தல்" என்பதற்கான சட்ட முன்வரைவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தச் சட்ட முன்வரைவு பாராளுமன்றத்தில் நாளை(16.12.2024) தாக்கல் செய்யயுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. முன்னதாக டிசம்பர் 16-ம் தேதி நிகழ்ச்சி நிரயில் இந்த மசோதா இடம் பெற்றிருந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பால் திருத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலில் இடம் பெறவில்லை. ஆனால், அதே சமயம் இந்த கூட்டத் தொடரிலேயே இம்மசோதாவை மத்திய அரசு தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது. இந்த சட்ட முன்வரையை அறிமுக நிலையிலேயே அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒருசேர எதிர்க்க வேண்டியது அவசியமாகும்.

நடைமுறை சாத்தியமில்லாத இந்த ஜனநாயக விரோத சட்ட மசோதாவை நிறைவேற்ற மோடி அரசு மூர்க்கம் காட்டுகிறது. இந்தச் சட்ட முன்வரைவு நிறைவேற்றப்பட வேண்டுமானால் அரசியல் சட்டத்தில் ஆறு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த அரசியல் சட்டத்திருத்தங்களை செய்யவேண்டுமானால் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அவசியம். ஆனால், இரு அவைகளிலும் பாஜக-வுக்கோ அதன் கூட்டணி கட்சிகளுக்கோ அத்தகைய பெரும்பான்மை இல்லை. இது நன்றாகத் தெரிந்தும் கொடுங்கோன்மையை கோலோச்சர் செய்யும் இந்த சட்டமுன்வரைவை கொண்டுவர மோடி அரசு துடிக்கிறது. அனைத்திலும் ஒற்றைத் தன்மையை திணிக்கத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ்-பாஜக வகையறாவின் அராஜகத்தின் ஒரு பகுதியே இந்த மசோதாவாகும்.

2029-ஆம் ஆண்டு முதல் ஒரே நாடு; ஒரே தேர்தல் நடைமுறைக்கு வரும் என்று மத்திய அரசு கொக்கரிக்கிறது. அப்படியானால், மக்களால் தேர்வு செய்யப்பட்ட பல மாநில அரசுகளைக் கலைக்க வேண்டியிருக்கும். மாநிலச் சட்டப்பேரவைகளில் எந்த ஒரு கட்சிக்கோ அல்லது கூட்டணிக்கோ பெரும்பான்மை கிடைக்கவில்லையெனில் குடியரசுத் தலைவர் ஆட்சி என்ற பெயரில் மத்திய அரசே அந்த மாநில நிர்வாகத்தைக் கைப்பற்றும் நிலை ஏற்படும்.

ஒரே நேரத்தில் பாராளுமன்றம் மற்றும் அனைத்து சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடைபெறுமானால் மின்னணு வாக்குப்பதிவு ஏந்திரங்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள் என பல்வேறு சவால்கள் குறுக்கிடும் நிலை ஏற்படும். அவசரகோலத்தில் அள்ளித் தெளிப்பது போல இந்தச் சட்டமுன்வரைவை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சியை துவக்கத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தொடர் மழை எதிரொலி:

# விழுப்புரத்தில் 277 ஏரிகள் முழுமையாக நிரம்பின

விழுப்புரம், டிச. 16-

தொடர் மழை காரணமாக விழுப்புரத்தில் 277 ஏரிகள் முழுமையாக நிரம்பின.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதம் 2-வது வாரத்தில் இருந்து வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. இதனிடையே வங்கக்கடலில் நிலைக்கொண்டிருந்த பெஞ்சல் புயல், விழுப்புரம் மாவட்டத்தில் கோரத்தாண்டவமாடியது. இந்த புயலால் மாவட்டத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு கடந்த 30, 1-ம் தேதிகளில் வரலாறு காணாத கனமழை கொட்டித்தீர்த்தது.

இதன் காரணமாக மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களுக்கும் நீர்வரத்து அதிகரித்து அவை வேகமாக நிரம்பின. இதற்கிடையில், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக கடந்த 3 நாட்களாக விழுப்புரம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

இதன் காரணமாக ஆறுகள், ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு மேலும் நீர்வரத்து அதிகரித்தது.

மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் மொத்தம் 505 ஏரிகளும், ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் 779 ஏரிகளும் ஆக மொத்தம் 1,284 ஏரிகள் உள்ளன. இவற்றில் பொதுப்பணித்துறை ஏரிகளில் 277 ஏரிகள் அதன் முழு கொள்ளளவை எட்டி நிரம்பியுள்ளன. 178 ஏரிகளில், 76 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையும், 11 ஏரிகளில் 51 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையும், 23 ஏரிகளில் 26 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையும், 16 ஏரிகளில் 25 சதவீதம் வரையும் தண்ணீர் உள்ளது.

அதேபோல் மாவட்டத்தில் உள்ள ஊரக வளர்ச்சித்துறை ஏரிகளான 779 ஏரிகளும் 100 சதவீதம் முழுமையாக நிரம்பி உபரிநீர் வெளியேறிச் செல்கிறது. மேலும் அந்த ஏரிகளில் உடைப்பு ஏற்படாமல் இருக்கும் வகையில் அதிகாரிகள் அவ்வப்போது கண்காணித்து வருகின்றனர்.